அருங்காட்சியக மலர்

(ஜனவரி - மார்ச், 1997.)

டைனாசரஸ் மாதிரி, மதுரை அருங்காட்சியகம்

வெளியிடுபவர்

கண். தீனதயாளன், இ.ஆ.ப.,

அருங்காட்சியகங்களின் ஆணையர்,

அரசு அருங்காட்சியகம், சென்னை-8.

30, ஏப்ரல், 1997

அருங்காட்சியக மலர்

(ஜனவரி - மார்ச் 1997)

தொகுப்பு

முனைவர் நே. தேவசகாயம்

துணை இயக்குநர்

முனைவர் வே. ஜெயராஜ்

காப்பாட்சியர், வேதியியல் பாதுகாப்பு

புதிய தொடர்ச்சி – பொதுப்பகுதி – மலர் – 1, இதழ் – 1, 1997.

©

அருங்காட்சியகங்களின் ஆணையர்

வெளியிடுபவர்

திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.,

அருங்காட்சியகங்களின் ஆணையர்.

அரசு அருங்காட்சியகம், சென்னை – 600 008.

ஏப்ரல், 1997.

பொருளடக்கம்

ஆணையரின் நேருக்கு நேர் i

I **செய்திப் பகுதி**

சிறப்பு நிகழ்ச்சிகள் 1
புதிய சேர்க்கைகள் 2
வேதியியப் பாதுகாப்புப் பணிகள் 6
கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் – நடத்துதல், பங்கு பெறுதல் 6
கண்காட்சிகள் 8
காட்சிக் கூடங்கள் வடிவமைத்தலும் புதுப்பித்தலும் 10
திங்கட் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள் வானொலி உரைகள் 12
கண்காட்சிக்கு உதவிகள் 15
ஆய்வுக் கட்டுரைகள், கைப்பிரதிகள், அறிக்கைகள் 16
நூல் வெளியீடுகள் 17
போட்டிகள் 17
அலுவலகப் பயணங்கள். ஆய்வுப் பயணங்கள் 18
பயிற்சிகள் 21
ஆராய்ச்சிப் பணிகள் 22
ஆராய்ச்சிக்கு உதவிகள் 23
வருங்கால நிகழ்வுகள் 26
வல்லுநர் குழுக்கூட்டத்தில் பங்கு பெறுதல் 27
அலுவலர் மாற்றங்கள் 27
கல்விப் பணிகள் 28

II **கட்டுரைப் பகுதி**

1. போஜ்பத்தர் – மரப்பட்டை – *ம.ந. புஷ்பா* 29
2. புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் - பயிற்சி – *தே. ஜவஹர் பிரசாத்ராஜ்* 30
3. சென்னை அருங்காட்சியகத்தில் அரும்பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சிகள் – *முனைவர் வே. ஜெயராஜ்* 32
4. மலையடிக்குறிச்சியில் மக்கள் குறை தீர்க்கும் பாண்டியர் கால ஊற்றுக் கிணறு – *நா. சுலைமான்* 35
5. வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் திருமகள் மற்றும் மூதேவி கற்சிலைகள் – *ம. காந்தி* 38
6. புகிரி நீலமலை ஆதிக்குடிச் சமுதாயத்தினரது மரபார்ந்த துளை இசைக்கருவி – *முனைவர் சி. மகேசுவரன்* 40
7. கோபி வைர விழா மேல்நிலைப்பள்ளியில் கிடைத்தபுதையல் – *அ. பெரியசாமி* 46
8 திரு விளக்குகள் – *ரு.தே. துளசி பிருந்தா* 49

III **படங்கள்** 53

ஆணையரின் நேருக்கு நேர்

வெற்றிப் பாதையில் நடந்து வரும் அருங்காட்சியகத்துறைக்கு 1997–98–ஆம் நிதி ஆண்டில் பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் ரூ. 78.85 இலட்சம் (புதிதாகத் துவங்கப்படவுள்ள பழநி அருங்காட்சியகத்திற்கான ரூ. 4.85 லட்சம் நீங்கலாக) ஒதுக்கியுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். பழநி, திருவாரூர். சிவகங்கை ஆகிய மூன்று மாவட்ட அருங்காட்சியகங்கள், 4 மாவட்ட அருங்காட்சியகங்களில் போதிய பணியிடங்கள் அதிகரிப்பு, கல்விப் பணிக்கான சாதனங்கள் வாங்குதல். மதுரையில் அருங்காட்சியகத்திற்கெனப் புதிய கட்டடம் கட்டுதல், மாவட்ட அருங்காட்சியகக் காட்சியமைப்புக்களைப் புதுப்பித்தல். வேலூர் மற்றும் கடலூர் ஆகிய இரு அருங்காட்சியகங்களில் பெரிய இராட்சச விலங்கு மாதிரிகள் அமைத்தல் ஆகியவை மாவட்ட மக்களுக்கு ஒரு இனிப்பான செய்தி ஆகும்.

2. சென்னை அருங்காட்சியகத்தில் சிறப்ப பூங்காக்கள். தோட்டங்கள். அலங்கார நிழற்குடைகள். சில காட்சிக் கூடங்கள் புதுப்பித்தல். படிமங்ளை முப்பரிமாணப்படம் எடுத்து அதற்கென ஒரு காட்சிக்கூடம் அமைத்தல், அரும்பொருட்பாதுகாப்பு முறைகளை விளக்கும் காட்சிக்கூடம் அமைத்தல். பயிற்சிகள் நடத்தத் தளவாடங்கள் வாங்குதல் போன்ற திட்டங்கள் செயலாற்றப்பட உள்ளன. சென்னை மக்களுக்கும் இவ்வருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் மக்களுக்கும் ஒரு நிறைவை அளிக்கும் என நம்புகிறேன்.

3. இதுவரை காலாண்டுச் செய்திமலராக வெளிவந்த இம்மலர். இப்பொழுது காலாண்டு அருங்காட்சியக மலராக மலருகிறது. அருங்காட்சியகத்துறையின் செய்திகளோடு பல்வேறு புதிய செய்திகளடங்கிய சிறிய கட்டுரைகளுடன் வெளிவருவது இத்துறையின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

4. இக்காலாண்டுக் காலத்தில் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. செய்தி மலர் உள்ளிட்டு மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. கண்காட்சிகள். போட்டிகள். பயிற்சிகள் பல நடத்தப்பட்டுள்ளன. முதன்முதலாக ஆவணக்காப்பக அலுவலர்களுக்கு ஒருவார காலத்திற்கு ஆவணங்கள் பாதுகாப்பு என்ற பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. முதன்முறையாக புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் என்ற பயிற்சி இருவார காலத்திற்கு நடத்தப்பட்டுள்ளது. சித்த மருத்துவ முகாம்கள், யோகா பயிற்சிகள், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன. காப்பாட்சியர்கள் பல்வேறு தேசிய கருத்தரங்குகளில் பங்கு கொண்டு ஆய்வுக்கட்டுரைகள் படித்துள்ளனர்.

5. சென்னை அருங்காட்சியகத்தை ஆய்வு நிறுவனமாக்க சென்னைப் பல்கலைக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட பேராசிரியர்கள் மூவர் அடங்கிய ஆய்வுக் குழு 27.3.1997 அன்று அருங்காட்சியகத்தை ஆய்வு செய்துள்ளது இன்னொரு இனிப்பான செய்தியாகும். புதிய அருங்காட்சியகங்கள், புதிய காட்சிக் கூடங்கள், புதிய நிகழ்வுகள், புதிய படைப்புகள் . . . பழமையில் புதுமை காண தகவல்களை அனுப்பி உதவுங்கள். வெற்றிப் பாதையில் வீரநடை போட உதவி வரும் காப்பாட்சியர்கள் மற்றும் அனைத்து அலுவலகப் பணியாளர்களுக்கும் இம்மலரைத் தொகுத்து உதவிய அருங்காட்சியகங்களின் துணை இயக்குநர். முனைவர் நே. தேவசகாயம். வேதியியப் பாதுகாப்புப் பிரிவுக் காப்பாட்சியர். முனைவர் வே. ஜெயராஜ் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது வெற்றிப் பாதையை உறுதியாக்கிய நமது அரசுக்கும் குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மற்றும் நமது துறை மாண்புமிகு அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகனார் ஆகியோருக்கும் நமது நன்றி உரித்தாகுக. அடுத்த மலரில் புதிய செய்திகளுடன் சந்திப்போமே!

அன்புடன்

(கண். தீனதயாளன்)

அரசு அருங்காட்சியகங்களின் ஆணையர்

சென்னை – 8.

31.4.1997.

I. செய்திப் பகுதி

காலாண்டுச் செய்திமலர், ஜனவரி - மார்ச், 1997

சிறப்பு நிகழ்ச்சிகள்

சென்னை

அகில இந்திய தொழில் கண்காட்சியில் தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறையின் சார்பாக ***'வரலாற்றில் சென்னை'*** என்ற காட்சியரங்கு அமைத்து அரும்பொருட்களையும் காட்சியிலமைக்கப்பட்டது (வடிவமைப்புப் பிரிவு). மூன்றாம் செவ்வாய் தோறும் சித்த மருத்துவ முகாம்களில் நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்டனர். 20.1.97 முதல் 24.1.97 வரை தமிழ்நாடு ஆவணக்காப்பகத்துடன் இணைந்து ஆவணக்காப்பாக அலுவலர்கள் பன்மருக்கு ***ஆவணங்கள் பாதுகாப்பு*** பற்றிய பயிற்சி முதன்முறையாக வழங்கப்பட்டது. கடலூர் பாடலீசுவரர் கோயிலில் சுமார் 250 மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள் உதவியுடன் தூய்மைப் பணி நடத்தப்பட்டது (வேதியியப் பாதுகாப்புப் பிரிவு). 29.1.97 முதல் 4.2.97 வரை ***"புவியியல் பொருட்களின் முக்கியத்துவம்'*** என்ற பயிற்சி முதன்முதலாக மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. முனைவர் வி. சுப்பிரமணியன். புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் கூடுதல் இயக்குநர் தொடங்கி வைத்தார். 18.3.97 அன்று பன்னாட்டு மகளிர் கழகம். அரசு அருங்காட்சியகத்தில் பெண்கள் முன்னேற்றம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்காக ரூ. 20,000/– அறக்கட்டளை நிதி வழங்கியதை அருங்காட்சியக ஆணையர் பெற்றார்.

மாவட்டங்களில்

10.3.97 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் திருச்சி அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார். 4.3.97 அன்று திருச்சி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. புனிதவல்லி பழநியாண்டி ஓவியக்கண்காட்சியைத் தொடங்கி வைத்து ***பொங்கல் ஓவியப்போட்டி***யில் பங்குகொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கினார்.

26.2.97 அன்று மதுரை மாவட்டக் கலை மன்றம் மதுரை அரசு இசைக்கல்லூரியின் சார்பாக காப்பாட்சியர் திரு. நா. சுலைமான் அவர்களுக்கு 16 ஆண்டுகளாக மதுரையில் கலைப்பணி செய்தமைக்கு ***கலை வளர் மணி*** என்னும் விருதினை தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறைச் செயலர் திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கி கவுரவித்தார்கள்.

7.2.97 அன்று திருச்சி அருங்காட்சியகத்தில் அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன். இ.ஆ.ப., காப்பாட்சியர்கள் கூட்டத்தில் கலந்து ஆலோசனைகள் வழங்கினார்.

அருங்காட்சியகங்களின் ஆணையர். திரு. கண். தீனதயாளன். இ.ஆ.ப., 28.2.1997 அன்று கடலூர் அருங்காட்சியகத்தில் ***சிறுவர் ஓவியக்கண்காட்சி***யைத் தொடங்கி வைத்து பங்கு பெற்றோருக்குச் சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கினார்.

11.2.97 அன்று அருங்காட்சியகங்களின் ஆணையர், திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.. அவர்கள் வேலூர் அருங்காட்சியகத்தில் நடைபெற்ற கண்காட்சியினைத் தொடங்கி வைத்து ***விலங்குகளைப் பதப்படுத்தும்*** பயிற்சியில் பங்கு பெற்றோருக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

26.3.97 அன்று மதுரை அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற ***சிறுவர் ஓவியப் போட்டி***யின் பரிசளிப்பு விழா. ***விலங்கியல் சிறப்புக் கண்காட்சி***யின் தொடங்க விழா மற்றும் *விலங்கினப் பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சி நிறைவு விழாவில் அருங்காட்சியகங்களின்* ஆணையர் திரு. கண். தீனதயாளன். இ.ஆ.ப.. கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார். காந்தி அருங்காட்சியகச் செயலாளர் திரு. ச. பாண்டியன் மற்றும் அமெரிக்கன் கல்லூரி விலங்கியல் துறைப் பேராசிரியர் டாக்டர். துவாரகநாத் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரி விலங்கியல் துறையின் அருங்காட்சியகத்திறகு ரூ. 2.25 இலட்சமும் சென்னை சரஸ்வதி கல்வி. பண்பாடடுக் குழுமத்தின் பாத்திரங்கள் அருங்காட்சியகத்திற்கு ரூ 2 இலட்சமும் மைய அரசிடமிருந்து நிதிஉதவி பெற்று கொடுக்கப்பட்டது.

புதிய சேர்க்கைகள்

சென்னை

மானிடவியல் பிரிவு

திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாளையம் கிராமத்திலிருந்து இரண்டு ஜோடி தங்கக்காதணிகள், ஒரு செம்பு ஜாடி; சேலம் மாவட்டம் இராசிபுரம் வட்டம். டவுன் சின்னக்கடை தெருவிலிருந்து ஒரு தங்கக் சங்கிலி, நான்கு அரும்பு வெள்ளி வளையங்கள். ஒரு அரைஞான் கயிறு; திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம். கண்டிராதீர்த்தம் கிராமத்திலிருந்து மூன்று தங்கப்பட்டை சங்கிலித் துண்டுகள், ஒரு தங்க டாலர். ஒரு சிறிய தங்கக் குண்டு. இரண்டு தங்கத் துண்டுகள், செப்புக் கலயத்தின் இரு பகுதிகள்; விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம். செஞ்சி வட்டம். வீரமநல்லூர் கிராமத்திலிருந்து ஒரு ஜோடி தங்க சர்பகாதணி. ஒரு தங்க சேலம்

அரசிலை, ஒரு தங்க டைமன் ஆகிய நகைகள் புதைப் பொருள் சட்டத்தின் கீழ் பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

15.3.97 சேகரிப்புப் பயணத்தின் மூலமாக சென்னைக் கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத் துறை மாணவர்கள் 42 பேரின் உதவியுடன் செங்கை – எம்.ஜி.ஆர். மாவட்டம். அத்திரம்பாக்கத்திலிருந்து 29 பழைய கற்காலக் கருவிகள் சேகரிககப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

நாணயவியல் பிரிவு

இராமநாதபுரம் மாவட்டம். திருவாடனை வட்டம். புல்லூர் முத்து ராமலிங்கம் கிராமத்திலிருந்து இரண்டு தென்னிந்திய பணங்கள். தருமபுரி மாவட்டம். தென்கணிக்கோட்டை. தாவக்கரை தரப்பு கோட்டி கிராமத்திலிருந்து 24 வெள்ளி நாணயங்கள். தென்கணிக் கோட்டையிலிருந்து இரண்டு விஜயநகர அரசர்களின் தங்க நாணயங்கள். இரண்டு மைசூர் சுல்தானின் தங்க நாணயங்கள் புதையலாகப் பெறப்பட்டன. சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் அலுவலரிடமிருந்து ஐந்து சிறப்புத் தபால் தலைகள். உரைகள். விளக்கமடல்கள் பெறப்பட்டன.

சிறுவர் அருங்காட்சியகம்

சென்னை தென்னக இரயில் பாதை போக்குவரத்துத்துறையிலிருந்து எம்.ஆர்.டி.எஸ். மாதிரி ஒன்று பெறப்பட்டது. பி.எஸ்.எல்.வி.. ஏ.எஸ்.எஸ.வி.. எஸ்.எல்.வி3 ஜி.எஸ்.எல்.வி.. ஐ.ஆர்.எஸ்.. ஐ.சி. ஆகிய ராக்கெட் மாதிரிகள் வாஙகப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

புவியியல் பிரிவு

புவியியல் மற்றும் சுரங்கத்துறையினரிடமிருந்து எட்டு பலவர்ண கருங்கற்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

விலங்கியல் பகுதி

வட ஆர்க்காடு மாவட்டம். வேலூர் வட்டம். புலிமேடு பகுதிகளுக்குச் சென்று வண்ணத்துப் பூச்சிகள் பிடிக்கப்பட்டு வேலூர் அருங்காட்சியகத்தில் காட்சிப் படுத்தப்பட்டன. யானை எலும்புக்கூடு ஒன்றிற்கு வேதியியப் பாதுகாப்பளிக்கப்பட்டு வேலூர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

29 வீரராயன் தங்கக்காசுகள் இராசிபுரம் வட்டாட்சியரிடமிருந்து புதையலாகவும். தையல் கருவி மாதிரி திரு. முகமது முசாவிடமிருந்து அன்பளிப்பாகவும். கோவை வட்டார மேனிலை அஞ்சல் அலுவலரிடமிருந்து ஐந்து அஞ்சல் தலைகள். முதல் நாள

உறைகள் அன்பளிப்பாகவும், டாக்டர் ம.சு. நாகிராஜண்ணன் அவர்களிடமிருந்து பெண்ணின் தலை, காளியின் தலை(2) , உடைந்த சிறிய சிற்பப் பகுதி ஆகியவை அன்பளிப்பாகவும் பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

புதுக்கோட்டை

பசும்பொன் மாவட்டத்திலிருந்து ஜேஷ்டா கற்சிலை பெறப்பட்டது; பழந்தின்னி வெளவால் ஒன்று பதப்படுத்தப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

மதுரை

தபால் துறையிலிருந்து 13 முதல் நாள் உறைகளுடன் தபால்தலைகள், திரு ஸ்ரீகாந்திடமிருந்து 10 நாயக்கர் கால செப்பு நாணயங்கள், சுற்றுலா அலுவலகத்திலிருந்து ஒரு சுற்றுலா வரைபடம் அன்பளிப்பாகப் பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன. கண்ணாடி இழையால் செய்யப்பட்ட 15 அடி உயர டைனாசரஸ் மாதிரி அருங்காட்சியக வளாகத்தில் காட்சியில் வைக்கப்பட்டது.

திருச்சி

தபால் துறையிலிருந்து 21 சிறப்பஞ்சல் தலைகள், உரைகள், விளக்கமடல்கள் பெறப்பட்டன. 27 நூல்கள் நூலகத்திற்கு வாங்கப்பட்டன.

வேலூர்

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், வேலூர் வட்டத்திலிருந்து ஒரு திருமகள் கற்சிற்பம், ஒரு மூதேவி கற்சிற்பம், அப்புக்கல்லிலிருந்து பெருங்கற்காலத்தைச் சார்ந்த அம்மிக்கல் ஒன்றும், குடியாத்தம் வட்டம், நத்தமேடு என்ற ஊரிலிருந்து கூர்முனை ஜாடி ஒன்றும் சேகரிக்கப்பட்டன. வேலூர் தபால் நிலைய அதிகாரியிடமிருந்து 13 அஞ்சல்தலைகள், உரைகள், விளக்கக் குறிப்புகள் பெறப்பட்டன. திரு. பாலகிருஷ்ணன் இரண்டு பழைய வருவாய் அஞ்சல் தலைகளை அன்பளிப்பாகக் கொடுக்க அவை சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

ஈரோடு

கோவை திரு. ஏ.ஆர்.கே. அருண், கொங்குச்சேரர், சோழர் மற்றும் மைசூர் சுல்தான்கள், மைசூர் உடையார்கள் நாணயங்கள் 25 அன்பளிப்பாக வழங்கினார்.

கடலூர்

சிதம்பரம் கனக்காரம் பட்டு என்ற கிராமத்திலிருந்து பிராமி, கௌமாரி, வராஹி, வைஷ்ணவி, தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட எட்டு கற்சிற்பங்கள் புதையலாகப் பெறப்பட்டன.

கோவை

அஞ்சல் துறையிலிருந்து 14 முதல் நாள் உறைகள். அஞ்சல் தலைகள். விளக்க மடல்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டன. 74 நூல்கள் நூலகத்தில் சேகரிக்கப்பட்டன. பொள்ளாச்சி வட்டம், அங்கலக்குறிச்சி திரு. மணி அவர்களிடமிருந்து எண்ணெய் வண்ண ஓவியம் பெறப்பட்டது. அவினாசி வட்டம். வேலாயுதம் பாளையத்திலிருந்து செங்கற்கள், பானை ஓடுகள், மணிகள், எலும்புகள் சேகரிக்கப்பட்டன.

உதகை

தொதுவப் பழங்குடியினரது நெருப்பு காடை தோல். உதகை வட்டம் கார்ஸ்மந்து திரு. போத்துளிக்குட்டனிடமிருந்து அன்பளிப்பாகவும், பொக்காபுரத்திலிருந்து காட்டுச் சுரைக்காய் சேகரிப்பின் மூலமும், வானொலி நிலைய ஒலிபரப்பு வல்லுநர் திரு. டி. மோகனிடமிருந்து தொதவரது புகிரி இடையீட்டுக் கடனாகவும் பெறப்பட்டு தொகுப்பில் சேர்க்கப்பட்டன.

கன்னியாகுமரி

மதுரை தபால் தலைமைக் கண்காணிப்பாளரிடமிருந்து 13 முதல் நாள் அஞ்சல் உறைகள். அஞ்சல் தலைகள் மற்றும் விளக்கமடல்கள் பெறப்பட்டன. விளவங்கோடு வட்டம். கணியல் ஆற்றங்கரையில் கிடைத்த செம்பு உருளி பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டது.

திருநெல்வேலி

முத்துராமலிங்கத் தேவரின் முதல் நாள் அஞ்சல் உறை, அஞ்சல் தலை. சேர. சோழ. பாண்டியர் மற்றும் சுல்தானியர் கால செம்பு நாணயங்கள். தென்காசி. திருப்புவனம் செப்புப் பட்டயங்களின் படிகள். புகைப்படங்களும். காந்திஜியின் முப்பரிமாண அஞ்சல் தலை, திருஷ்டிப் பொம்மைகள். மரப்பொம்மைகள். அலகு குத்தும் கருவிகள் சேகரிக்கப்பட்டு தொகுப்பில் சேர்க்கப்பட்டன. கி.பி. 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 5 அங்குல உயர திருமால் படிமம். மனித உருவில் தம்புரா வாசிக்கும் பெண நந்தி பித்தளைச் சிற்பம். இருகரங்களிலும் உருளை வடிவ இசைக்கருவியில் இசை எழும்பும் தோற்றமுள்ள ஒரு மனித காளை தலையுள்ள பித்தளைச் சிற்பமும் விலைக்கு வாங்கப்பட்டன. போஜ்பத்தர்கள்–2, கரிகிரி பாத்திரங்கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஓவியம் பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

கிருட்டிணகிரி

ஒசூர் வட்டம், சூளகிரி கிராமத்திலிருந்து மூன்று நடுகற்கள் கள ஆய்வு மூலமாகவும். ஒரு ரியால், ஒரு பிர் நாணயங்கள் திரு. ரமேஷ் மூலமாகவும். 6 மணிகள்

காவேரிப்பட்டிணம் திரு. இ.ஜி. நடராஜன் வழியாகவும், காவேரிப்பட்டினம் திரு. விமல்பாபு மூலமாக ஒரு கத்தியும். தபால்துறையிலிருந்து 19 முதல் நாள் வெளியீட்டு அஞ்சல் உறைகள், அஞ்சல் தலைகள் நன்கொடையாகவும் பெறப்பட்டு சேமிப்பில் சேர்க்கப்பட்டன.

வேதியியப் பாதுகாப்புப் பணிகள்

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 5 படிமங்கள். 650 செப்பு நாணயங்கள், 8 ஈய நாணயங்கள். ஒரு தஞ்சாவூர் கண்ணாடி ஓவியம். 3 தஞ்சாவூர் பலகை ஓவியங்கள். ஒரு நீர்வண்ண ஓவியம். ஒரு வரைபடம். 5 தஞ்சாவூர் கேடயங்கள். 5 தஞ்சாவூர் புடைப்புத் தகடுகள். 2 கற்சிற்பங்களும். கடலூர் அருங்காட்சியகத்தில் ஏழு படிமங்கள், 8 கற்சிற்பங்கள். 5 இசைக் கருவிகள். 3 தோல் பாவைகள். ஒரு சுட்டமண் பானை, ஒரு நவீனகால ஓவியம் ஆகியவைகள் தகுந்த முறையில் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டன. கடலூர். திருப்பாதிரிப்புலியூர் பாடலீசுவரர் கோயிலில் விளக்குகள். கற்தூண்கள். சுவர்கள். கதவுகள் போன்றவை வேதிய பாதுகாப்புக்குட் படுத்தப்பட்டன. இந்திய தொல்பொருள் துறையிலிருந்து பெறப்பட்ட 62 செப்பு நாணயங்கள் தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்டன. வேல்யூஸ் கலை நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட ஒரு எம்ப்ராய்டரி ஓவியம் தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்டது.

விலங்கியல் பிரிவு

5.2.97 மற்றும் 6.2.97 ஆகிய இரு நாட்களில் வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அமிர்திவனத்திற்குச் சென்று யானையின் எலும்புக்கூட்டைத் தோண்டி எடுத்து வேதியியப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் - நடத்துதல், பங்கு பெறுதல்

சென்னை

தொல்பொருள் பிரிவு

19.3.97–24.3.97 திரு. இரா. பாலசுப்பிரமணியன் டெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் நடைபெற்ற இந்திய பாரம்பரியக் கழகத்தின் பட்டறையில் கலந்து கொண்டு ***“தேசிய கலைக்கூட கட்டடம்”*** பற்றி உரையாற்றினார்.

நாணயவியல் பிரிவு

27.2.97–1.3.97 திருமதி இரா. சாந்தி. கேரள மாநிலம், திருச்சூரில் நடைபெற்ற தென்னிந்திய நாணயவியல் சங்க கருத்தரங்கில் கலந்து. ரோமானியப் *பேரரசர் பாஸ்டினாஸின்* *"திருநிலைப்பாடு நாணயங்கள்"* என்ற கட்டுரை படித்தார்.

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

முனைவர் வே. ஜெயராஜ். அகில உலக கடலாய்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு *"ஈயக்கட்டியின் ஓர் தொழில் நுட்ப ஆய்வு"* என்ற கட்டுரை படித்தார்.

27.2.97–1.3.97 முனைவர் வே. ஜெயராஜ் திருச்சூரில் நடைபெற்ற நாணயவியல் கருத்தரங்கிற்கு *"ஆர்க்காடு நவாபுகளின் நாணயச் சாலைகள்"* என்ற கட்டுரையினை அனுப்பி வைத்தார்.

8.9.10.3.97 முனைவர். வே. ஜெயராஜ். டேராடூனில் நடைபெற்ற அகில இந்திய வேதியியப் பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து *"அருங்காட்சியக தேசிய கலைக்கூட பராமரிப்பு ஒரு முன்னோடித் திட்ட அறிக்கை"* என்ற கட்டுரை படித்தார்.

25.3.97 முனைவர் வே. ஜெயராஜ். சென்னைப் பல்கலைக் கழக தொல்லியல் துறை நடத்திய *"சுற்றுலாவும் தொல்பொருளியலும்"* – என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு *"தென்னிந்தியாவில் படிமங்களின் பாதுகாப்பு"* – என்ற கட்டுரை படித்தார். ஒரு பகுதிக்கு தலைமை தாங்கி நடத்தினார்.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

திரு. ஜெ. இராஜாமுகமது, காப்பாட்சியர்

22.3.97 புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் புதுக்கோட்டை மாவட்ட வரலாறு என்ற கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மாவட்டக் கருத்தரங்கில் *"புதுக்கோட்டை பழைய அரண்மனை"* என்ற கட்டுரை படித்தார்.

சேலம்

திரு. க. இலக்குமி நாராயணன், காப்பாட்சியர்

30.1.97–3.2.97 நாகார்ஜுன் பல்கலைக்கழக தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டு *"சேலம் – சில ஊர்ப் பெயர்கள்"* என்ற ஆய்வுரையாற்றினார்

வேலூர்

திரு. ம. காந்தி சென்னையில் தொல்பொருள் துறையும், கடலாய்வு நிறுவனமும் இணைந்து நடத்திய பன்னாட்டு கடலாய்வு கருத்தரங்கில் கலந்து கொண்டார். ***"குடிகாட்டு தொல்பொருட்கள்"*** என்ற கட்டுரை அனுப்பி வைத்தார்.

உதகை

முனைவர். சி. மகேசுவரன், கோவை இலக்கிய வட்டத்தில், ***வண்ணாற்றங்கரை – ஒரு தொல் வரலாற்றுக்கால மாந்தர் வாழிடம்*** எனும் கட்டுரை படித்தார்

கண்காட்சிகள்

மானிடவியல், நாணயவியல் பிரிவு

பன்னாட்டு கடலகழாய்வுக் கருத்தரங்கினை ஒட்டி தமிழ்நாடு தொல்லியல் துறை நடத்திப கண்காட்சியில் மானிடவியல் மற்றும் நாணயவியல் பொருட்கள் காட்சியிலமைக்கபபட்டன.

அகில இந்திய சுற்றுலா வர்த்தகக் கண்காட்சியில் அருங்காட்சியகத்துறை பங்கேற்றது.

புவியியல் பிரிவு

4.2.97 பயிற்சியை ஒட்டி, புவியியல் பொருட்களின் ***சிறப்புக் கண்காட்சி***யினை இந்திய புவியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு. ஜி.என். வரதன் தொடக்கி வைத்தார்.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

1.1.97 புதுக்கோட்டை மாவட்ட பயனுள்ள தாவரங்கள்

17.2.97 – 20.2.97 அறிவியல் விந்தைகள்

மதுரை

22.2.97, 23.2.97 பாண்டியன் ஓட்டலில் நடைபெற்ற கண்காட்சியில் ***பாலூட்டிகள் மற்றும் பறவைகள் கண்காட்சி*** அமைக்கப்பட்டது.

26.3.97 ***வண்ணத்துப்பூச்சிகள்–சிறப்புக் கண்காட்சி*** தொடங்கப்பட்டது.

திருச்சி

பொங்கல் ஓவியக் கண்காட்சி 4.3.97 முதல் 16.3.97 வரை நடைபெற்றது. வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. புனிதவல்லி பழநியாண்டி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உதவி சுற்றுப் புற நலப்பொறியாளர் திரு. முத்துக்கனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேலூர்

11.2.97 ***விலங்கியல் கண்காட்சி*** தொடங்கி வைக்கப்பட்டது. அருங்காட்சியகங்களின் ஆணையர், திரு. கண். தீனதயாளன். இ.ஆ.ப., கலந்து கொண்டார்.

24.3.97 ***வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட பாறை ஓவியங்களின் புகைப்படக் கண்காட்சி***, நகர் மன்றத் தலைவர் திருமதி. வி. வசந்தி, அருங்காட்சியகங்களின் துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம். தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது.

ஈரோடு

26.1.97 ***இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள், தபால்த் தலை, நாணயக்கண்காட்சி*** – பெரியார் மாவட்ட வரலாற்று பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.

கடலூர்

28.2.97 ***சிறுவர் ஓவியக் கண்காட்சி, கற்சிற்பங்கள்*** (புதிய சேர்க்கைகளின்) ***கண்காட்சி*** தொடங்கி வைக்கப்பட்டன. திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.. அருங்காட்சியகங்களின் ஆணையர் கலந்து கொண்டார்.

உதகை

தொதவரது நெருப்புக்கடை கோல் – பிப்ரவரி. தொதவரது புகிரி – மார்ச் திங்கள் காட்சிப் பொருட்களாகக் காட்சிப்படுத்தப்பட்டன.

திருநெல்வேலி

23.1.97 ***அரும்பொருட்கள் கண்காட்சி,*** பேட்டை மீனாட்சி ஆங்கிலப்பள்ளி. 23.1.97 முதல் 25.1.97 வரை

10.2.97–12.2.97 தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து நடத்திய ***மலர், செடிகள் கண்காட்சி***யில் கலந்து பறவைகள், தாவர மாதிரிகள், பூவகைகள் காட்சியில் வைக்கப்பட்டன.

கிருட்டிணகிரி

21.2.97 ***நாணயங்கள் கண்காட்சி,*** அரசு அருங்காட்சியகமும், சுவாமி விவேகானந்தா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியும் இணைந்து நடத்தின. தென்னிந்திய கலாச்சார ஆய்வு மைய கிருட்டிணகிரி கிளைத் தலைவர் திரு. ரிஜாதுதீன் அகமது தொடக்கி வைத்தார்.

காட்சிக் கூடங்கள் வடிவமைத்தலும் புதுப்பித்தலும்

சென்னை

தொல்பொருள் பிரிவு

படிமக்கூடக் காட்சிப் பெட்டிகள் சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

புவியியல் பிரிவு

ஒன்பது காட்சிப் பெட்டிகள் புதுப்பிக்கும் பணி நிறைவுற்றது. இன்னும் ஒன்பது காட்சிப் பெட்டிகளின் பணி தொடருகிறது.

மானிடவியல் பிரிவு

3.77 இலட்சம் செலவில் வரலாற்றுக்கு முந்தியக் கால காட்சிக் கூடத்தின் புதுப்பிக்கும் பணி தொடரப்பட்டது.

வனக்கலைப் பிரிவு

ஆளுநர் குதிரை வண்டி ஒன்று நாணயவியல் பகுதியிலிருந்து பெறப்பட்டு தேசிய கலைக் கூடத்தில் காட்சியில் வைக்கப்பட்டது (வடிவமைப்புப் பிரிவு).

தாவரவியல் பிரிவு

வகைப்பாட்டுத் தாவரவியற் கூடத்தில் காட்சிப் பெட்டிகளைப் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

சிறுவர் அருங்காட்சியகம்

சிறுவர் அருங்காட்சியக முதல் பாடியில் அறிவியல் கூடத்தில் ஒன்பது புதிய பெட்டிகளும், இயற்பியல் பகுதியில், மூன்று புதிய காட்சிப் பெட்டிகளும், நாகரிகங்கள் காட்சிக் கூடத்தில் உலக நாகரீகங்களை விளக்க 11 புதிய காட்சிப் பெட்டிகளும் செய்து முடிக்கப்பட்டன.

வடிவமைப்புப் பிரிவு

மதுரை அருங்காட்சியகத்தில் 15 அடி உயர கண்ணாடி இழை "டைனாசர்" மாதிரி காட்சியிலமைக்கப்பட்டது. சேலம் அருங்காட்சியகத்திற்கு புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்திலிருந்து பெறப்பட்ட பிளாஸ்டர் மாதிரிகள் அனுப்பப்பட்டன. பெயர்ப் பலகைகளில் `Madras' என்பது சென்னை என்று மாற்றப்பட்டது.

புதுக்கோட்டை

கலை, கைத்தொழில், ஓவியங்கள், மரச்சிற்பங்கள் காட்சிக் கூடங்கள் ரூ. 15 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன. கே.வி.ஏ. ஜெனரேட்டர் ஒன்று ரூ. 34.000 செலவில் வாங்கப்பட்டது.

சேலம்

புதுதில்லி தேசிய அருங்காட்சியகம் வழங்கிய சிந்துச்சமவெளி முத்திரைகள் மற்றும் மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டன. புதிய காட்சிப் பெட்டியில் மீன் வகைகள் காட்டிப்படுத்தப்பட்டன. 12 கற்சிற்பங்கள் பீடங்களில் அழகுற காட்சிப்படுத்தப்பட்டன. 12 ஓவியங்கள் காட்சியில் வைக்கப்பட்டன.

மதுரை

உலோக வேலைப்பாடுகள், மதுரைக் கூடக் காட்சிப் பெட்டிகள் சீர் செய்யப்பட்டன. வண்ணத்துப்பூச்சிகள் காட்சிப் பெட்டி அமைக்கப்பட்டு காட்சி பொருட்கள் வைக்கப்பட்டன.

கடலூர்

மானிடவியல், விலங்கியல்,நாணயங்கள் காட்சிப் பெட்டிகளுக்கு கண்ணாடிகள் பொருத்தப்பட்டன. தோல்பொம்மைகள் காட்சிப் பெட்டிக்கு `அக்ரைலிக் தகடு' பொருத்தப்பட்டது. சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி ஆகிய கற்சிற்பங்கள் புதிதாக அமைக்கப்பட்ட அடித்தளத்தில் பொருத்தி காட்சியில் வைக்கப்பட்டன. மானிடவியல் மற்றும் இயற்கையியல் காட்சிக் கூடங்களிலுள்ள காட்சிப் பெட்டிகளுக்கு வர்ணம் தீட்டப்பட்டது.

திருநெல்வேலி

அஞ்சல் தலைக்கூடம் தொடங்க காட்சிப் பலகைகள் அமைக்கப்பட்டன. புதிய கட்டடத்தில் அருங்காட்சியகம் அமைக்க காட்சிப் பெட்டிகளுக்கான பொருட்கள் பெறப்பட்டன.

கன்னியாகுமரி

புதிய தபால்தலைகள், உருளி மற்றும் கற்சிறபங்கள் காட்சியிலமைக்கப்பட்டன.

கிருட்டிணகிரி

தருமபுரி மாவட்ட வரைபடம் கண்ணாடியில் திட்டப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டது.

திங்கட் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், வானொலி உரைகள்

சென்னை

தொல்பொருள் பகுதி

10.1.97 *படிமங்கள்* - இரா. பாலசுப்பிரமணியன். சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்க்கு உரையாற்றினார்.

1.3.97 *அரும்பொருட்கள்* ஸ்டெல்லா மேரிக்கல்லூரி மாணவியர்க்கு அரும்பொருட்கள் பற்றி உரையாற்றப்பட்டது. மானிடவியல் பிரிவு

மானிடவியல்,

2.1.97 முனைவர் நே. தேவசகாயம். சென்னைக் கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு காட்சியுரை உரையாற்றினார்.

20.1.97 முனைவர் நே. தேவசகாயம். *'ஆவணங்கள் பாதுகாப்பு'* பயிற்சியைத் தொடங்கி வைத்தார். 24.1.97ல் வாழ்த்துரை வழங்கினார்.

3.2.97 முனைவர் நே. தேவசகாயம், *புவியியல் பொருட்களின் முக்கியத்துவம்* பயிற்சியின் தொடக்க விழாவில் தலைமை தாங்கினார்.

27.2.97 முனைவர் நே. தேவசகாயம். *சிந்துச் சமவெளி நாகரிகம்* 4.3.97–ல் நிறைவு நிழாவில் வாழ்த்துரை மற்றும் வரலாற்றுக்கு முந்தைய காலம், ஸ்டெல்லா மேரிக்கல்லூரி மாணவியர்களுக்கு உரையாற்றினார்.

வனர்கலைப்பிரிவு

கட்டடக்கலை, திரு. ம. மோகன், ஸ்டெல்லா மேரிக் கல்லூரி மாணவியர்களுக்கு உரை.

புவியியல் பிரிவு

2.1.97 ***புவியியல் காட்சிக் கூடங்கள்,*** தே. ஜவகர். பிரசாத்ராஜ். சென்னை கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர்களுக்கு உரையாற்றினார்

19.2.97 ***விலங்குகளைப் பதப்படுத்தும் முறைகள்,*** திரு. பா. ஜவஹர் கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு உரை.

23, 24.1.97 ***விலங்குகளைப் பதப்படுத்தும் முறைகள்,*** திரு. பா. ஜவஹர். மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி மாணவர்களுக்கு உரை.

தாவரவியல் பிரிவு

21.1.97 ***நோய்களுக்கு வர்ம முறை சிகிச்சை,*** டாக்டர் எஸ். இராஜாமணி.

18.2.97 ***மாறுபாடில்லா உண்டி,*** டாக்டர். ஜெயபிரகாஷ் நாராயணன்

18.3.97 ***'எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு',*** டாக்டர். உஷா இராகவன்.

தாவரங்களைப் பாதுகாக்கும் முறைகள். திருமதி ம.ந. புஷ்பா. கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்காக.

வேதியியப் பாதுகாப்புப் பகுதி

20.2.97–21.2.97 ***ஓவியங்களின் பாதிப்புகள்,*** முனைவர். வே. ஜெயராஜ். அரசு கலை. கைத்தொழில் கல்லூரி. சென்னை.

26.2.97 ***இலண்டன் மாநகர்*** அருங்காட்சியங்கள் முனைவர். வே. ஜெயராஜ்.

20.3.97 ***வண்ணமணி மாலை,*** முனைவர். வே. ஜெயராஜ். வானொலி நேரடி ஒலிபரப்பு.

வடிவமைப்புப் பிரிவு

3.2.97 *"திரு. அருங்காட்சியகக் காட்சியமைப்பு முறைகள்"* ஜா. ரா. அசோகன். என்ற உரை புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் என்ற பயிற்சியில் நிகழ்த்தினார்.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

25.2.97 ***விலங்கியல் குறித்த நம்பிக்கைகள்*** அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. புதுக்கோட்டை.

சேலம்

23.1.97, 18.2.97, 21.3.97 – **அருங்காட்சியகப் பண்பாடும், பயன்பாடும்.** திரு. க. இலக்குமிநாராயணன். சேலம் மாவட்ட தொழில் முறைகளுக்கான பயிற்சியில் உரையாற்றினார்.

வேலூர்

29.1.97 *வரலாற்றில் முரண்பாடுகள்,* பேராசிரியர். சி. சுப்பிரமணியன், முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரியின் வரலாற்றுத் துறைத் தலைவர்.

ஈரோடு

கல்வெட்டுக்களில் சுவையான செய்திகள், திரு. அ. பெரியசாமி. நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு சிற்தோட்டில் உரை.

கடலூர்

9.1.97 ***பண்பாட்டுத் துறையின் பெருமைமிக்க முன்னேற்றம்,*** திருமதி. ரு.தே. துளசி பிருந்தா. பாண்டிச்சேரி வானொலியில் உரை.

உதகை

24.1.97 *நீலமலைப் பழங்குடியினரது சுற்றுச் சூழல் பட்டறிவு,* முனைவர் சி. மகேசுவரன், தேசிய மாணவர் படையினருக்கு உரை

26.1.97 ***தொல்லியல் பொருட்கள் கூறும் நீலகிரியின் வரலாறு,*** முனைவர் சி. மகேசுவரன், உதகை வானொலி உரை.

26.1.97 ***குடியரசுநாள் விழா நிகழ்ச்சிச் சிறப்புரை,*** முனைவர் சி. மகேசுவரன், ஜே.எஸ்.எஸ். பள்ளி. உதகை.

14.2.97 ***பழங்குடியினரும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வும்,*** முனைவர். சி. மகேசுவரன், ஆசிரியர்களுக்கான விழிப்புணர்ச்சி பயிற்சி முகாமில் உரை.

திருநெல்வேலி

10.2.97 ***அருங்காட்சியகம் ஓர் கண்ணோட்டம்,*** திரு. நா. சுலைமான், திருநெல்வேலி வானொலியில் உரை.

27.2.97 ***தமிழக நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சி,*** திரு. நா. சுலைமான், பண்பாட்டுப் பலகணி விழாவில் உரை

16.3.97 ***கலைப் பொருட்கள், ஓவியங்கள் புகைப்படம் எடுக்கும் முறை,*** திரு. நா. சுலைமான், புகைப்படக் கலைஞர்களுக்கு உரை. அமெரிக்கன் கல்லூரி. தமிழ்த்துறை மாணவர் 60 பேருக்கு ***வரலாற்றுக்கு முந்தைய தமிழர்கள்*** என்னும் தலைப்பில் விரிவுரை.

கண்காட்சிக்கு உதவிகள்

சென்னை

மானிடவியல் பிரிவு

1. வேளாங்கண்ணி பள்ளி, வில்லிவாக்கம். சென்னை வரலாற்றுக்கு முந்தைய கால ஆயுதங்கள். பழங்குடிகள் மற்றும் சிந்து சமவெளி நாகரிக புகைப்படங்கள் வழங்கப்பட்டு, திருப்பிப் பெறப்பட்டன.
2. நியு பிரின்ஸ் மெட்ரிக்குலேசன் மேனிலைப்பள்ளி. சென்னை. வரலாற்றுக்கு முந்தைய கால காட்சிப் பொருட்கள். பழங்குடியினர். இசைக் கருவிகள். இரும்பு கால பொருட்கள் மற்றும். சிந்து சமவெளி நாகரிக புகைப்படங்கள் வழங்கப்பட்டு. திரும்பப் பெறப்பட்டன.

வண்கலைப் பிரிவு

1. நியுபிரின்ஸ் மெட்ரிக்குலேசன் மேனிலைப்பள்ளிக்கு 11 இராஜ ரவிவர்மாவின் ஓவியங்கள் கொடுக்கப்பட்டு. திரும்பப் பெறப்பட்டன.
2. சென்னை, அரசு கலை மற்றும் கைத்தொழில் கல்லூரியின் வளர்கலை அருங்காட்சியகத் தொடக்க விழாவிற்கு ஒன்பது ஓவியங்கள் வழங்கப்பட்டு. திரும்பப் பெறப்பட்டன.

தாவரவியல் பிரிவு

பூந்தமல்லி, தூய யோவான் மெட்ரிக்குலேசன் பள்ளிக்கு காளான் மற்றும் பூச்சித் தின்னித் தாவரங்களின் மாதிரிகள் வழங்கப்பட்டு, திருப்பிப் பெறப்பட்டன.

புவியியல் பிரிவு

1. தூயயோவான் மேல்நிலைப்பள்ளிக்கு புவியியல் பொருட்கள் கொடுத்து. திரும்பப் பெறப்பட்டன.
2. அன்னை வேளாங்கண்ணி பள்ளிக்கு கடனாகப் பொருட்கள் கொடுக்கப்பட்டு. திரும்பப் பெறப்பட்டன.

மாவட்டங்களில்

திருச்சி

காவல்துறை குடியிருப்பில் உள்ள லலிதா தொடக்கப்பள்ளிக்கு அரும்பொருட்களும் ஒளிப்படங்களும் வழங்கப்பட்டு, திருப்பிப் பெறப்பட்டன.

மதுரை

பேட்டை. மீனாட்சி மெட்ரிக்குலேசன் பள்ளிக்கு இசைக்கருவிகள், நாணயங்கள், கற்கால கருவிகள். ஓவியங்கள் போன்றவை கடனாக வழங்கப்பட்டு, திரும்பப் பெறப்பட்டன.

ஆய்வுக் கட்டுரைகள், கைப்பிரதிகள், அறிக்கைகள்

முனைவர் வே. ஜெயராஜ், வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்

1. *ஆர்க்காடு நவாபுகளின் மத நல்லிணக்கம்,* காயினெக்ஸ் 96. சென்னை.
2. *குற்றாலம் சித்திரசபையின் சுவரோவியங்கள்* – ஓர் ஆய்வு. இந்திய பண்பாட்டுப் பொருட்களின் பாதுகாப்பு மலர். தொகுதி 28. 1995.
3. *ஓவியங்களும் அவற்றின் பாதுகாப்பும்,* தென்மண்டல பண்பாட்டு மையம், தஞ்சாவூர் – அறிக்கை.
4. *ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் கோயில் சுவரோவியங்கள் பாதுகாப்பு,* அறிக்கை.
5. *தஞ்சாவூர் சரஸ்வதிமகால் நூலக மேம்பாடு* – அறிக்கை

திரு. ஜெ. இராஜாமுகமது, புதுக்கோட்டை அருங்காட்சியகக் காப்பாட்சியர்

புதுக்கோட்டை மன்னர் ராஜராஜகோபால தொண்டைமான், மாலைமுரசு, 17.1.97.

திருமதி கு.தே. துளசி பிருந்தா, கடலூர் அருங்காட்சியகக் காப்பாட்சியர்

1. *அரசு அருங்காட்சியகம், கடலூர்* – கைப்பிரதி.
2. *செயின்ட் டேவிட் கோட்டை – அறிந்ததும் அறியாததும்* – தினமணி, 18.3.97.

திரு. நா. சுலைமான், திருநெல்வேலி அருங்காட்சியகக் காப்பாட்சியர்

1. **வேலூர் கரிகிரி பானை மற்றும் மரப்பட்டையில் எழுதும் கடிதம்,** சூரியகாந்தி, கதிரவன் நாளிதழின் வாரமலர். திருநெல்வேலி, 2.3.97.

கிருட்டிணகிரி

ப. காசிலிங்கம், காப்பாட்சியர் -

தகடூர் நாட்டில் நடுகற்கள், தகடூர். முரசு.

நூல் வெளியீடுகள்

முனைவர் நே. தேவசகாயம், துணை இயக்குநர் மற்றும்
முனைவர் வே. ஜெயராஜ், வேதியியல் பாதுகாப்புப் பிரிவு, காப்பாட்சியர்.

1. ***காலாண்டுச் செய்தி மலர்*** (அக்டோபர் - டிசம்பர். 1996), 30.3.1997.
2. ***அரசு அருங்காட்சியகம், சென்னை - ஓர் ஆய்வு நிறுவனம்,*** மார்ச். 1997, விலை ரூ. 35.00

முனைவர் வே. ஜெயராஜ், வேதியியல் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர். ***ஆவணங்கள் பாதுகாப்பு,*** ஜனவரி. 1997. விலை ரூ. 15.00

போட்டிகள்

திருச்சி

பொங்கல் விழாவையொட்டி. பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 60 பள்ளி மாணவர்களுக்காக ***ஓவியப்போட்டி*** நடத்தப்பட்டது.

மதுரை

26.2.97 **சிறுவர் ஓவியப்போட்டி,** இந்துஸ்தான் பென்சில்ஸ் நிறுவனத்துடன் இணைந்து பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்டது.

திருநெல்வேலி

24.3.97 புனித சேவியர் மேனிலைப் பள்ளி மாணவர்கள் 1500 பேருக்கு ***அருங்காட்சியகமும் அதன் பயனும்*** என்ற கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு. பரிசுகள் வழங்கப்பட்டது.

கிருட்டிணகிரி

22.2.97 ***நாணயங்கள் கண்காட்சி***யில் 3000 நாணயங்கள் இடம் பெற்றன. பரிசளிப்பு விழாவில் திரு. இரா. பீதாம்பரம். வருவாய் கோட்டாட்சியர், திரு. சத்திய நாராயணா, வட்டாட்சியர், திரு. நிஜாதுதீன் அகமது, திருமதி. கிருஷ்ணவேணி கல்யாணராம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றனர்.

அலுவலகப் பயணங்கள், ஆய்வுப்பயணங்கள்

திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அருங்காட்சியகங்களின் ஆணையர்

4.1.97 கடலூர். விழுப்புரம் ஆய்வுப் பயணங்கள்.

4.2.97 மதுரை காந்தி அருங்காட்சியக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

7.2.97 திருச்சி அருங்காட்சியகத்தில் மாவட்டக்காப்பாட்சியர்கள் கூட்டம் நடத்த பயணம்.

8.2.97 திருநெல்வேலி அருங்காட்சியகம் மற்றும் புதிய கட்டடம் ஆய்வுப் பயணம்.

9.2.97 கன்னியாகுமரி அருங்காட்சியகத்திற்கு ஆய்வுப் பயணம்.

11.2.97 வேலூர் அருங்காட்சியகத்தில் விலங்கினப் பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொள்ள பயணம்.

21.3.97 புதுதில்லியில் தனியார் அருங்காட்சியக நிதி உதவிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் பயணம்.

26.3.97 மதுரை அருங்காட்சியகத்தில் சிறுவர் ஓவியப் போட்டி பரிசளிப்பு விழா, கண்காட்சி தொடக்க விழா. விலங்கினப் பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சி நிறைவு விழா ஆகியவற்றில் கலந்து கொள்ள பயணம்.

முனைவர் நே. தேவசகாயம், துணை இயக்குநர்

15.3.97 அத்திரம்பாக்கத்திற்கு சென்னைக் கிறித்தவக் கல்லூரி மாணவர்களுடன் பயிற்சிப் பயணம்.

19.3.97 போரூர் பாத்திரங்கள் அருங்காட்சியத்தை ஆய்வு செய்து அறிக்கை சமர்பித்தல்.

24.3.97 வேலூர் பயணம் மேற்கொண்டு ***பாறை ஓவியங்கள்*** கண்காட்சி தொடங்கி வைத்தார்.

தொல்பொருளியல் பிரிவு

இரா. பாலசுப்பிரமணியன், காப்பாட்சியர்.

5. 6.2.97. வேடசந்தூர் சென்று கற்சிற்பங்கள் சிங்கத் தூண்களை ஆய்வு செய்தார்.

7.3.97, 28.3.97 மயிலாடுதுறை சென்று படிமங்களை ஆய்வு செய்தார்.

19.2.97–24.3.97 புதுடெல்லியில் இந்திய பாரம்பரிய கழகம் நடத்திய பணிப்பட்டறையில் கலந்து கொள்ள பயணம்.

விலங்கியல் பிரிவு

பா. ஜவகர், காப்பாட்சியர்

23.1.97, 24.1.97 மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரிக்கு பயணம் மேற்கொண்டு. அருங்காட்சியகம் பார்வையிடப்பட்டு உரையாற்றப்பட்டது.

3.2.97–11.2.97 வேலூர் பகுதிகளில் விலங்கினங்கள் சேகரிக்கவும் பயணம் மற்றும் வேலூரில் பயிற்சியளிக்கவும் பயணம்.

20.2.97. 21.2.97 பழநி அருங்காட்சியக இடம் பெறுவது தொடர்பாக திண்டுக்கல் பயணம்.

24.3.97–27.3.97 மதுரை அருங்காட்சியகத்தில் பயிற்சிக்காக மதுரைக்கு பயணம்.

வேதியியப் பாதுகாப்புப் பகுதி

முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர்

27.1.97–31.1.97 கடலூர் பயணம். பாடலீசுவரர் கோயில் பாதுகாப்ப

28.2.97 சரஸ்வதி மஹால் நூலக அருங்காட்சியக மேம்பாடு ஆய்வு. தஞ்சாவூர் பயணம். தஞ்சாகூர். ராயல் அருங்காட்சியகம் ஆய்வு செய்யப்பட்டது.

8.3.97–10.3.97 டேராடூன் பயணம். அகில இந்திய வேதியியப் பாதுகாப்புக் கருத்தரங்கு.

வடிவமைப்புப் பிரிவு

ஜா.ரா. அசோகன். கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்தில் அருங்காட்சியகங்கள் பற்றிய ஒப்பீட்டு மதிப்பீடு ஆய்வு தொடர்பாக 27.2.97 முதல் 5.3.97 வரை பயணம் மேற்கொண்டார்.

மதுரை

பா. சாம்சத்தியராஜ். காப்பாட்சியர்

22.1.97 திண்டுகல் மன்னர் திருமலை மாவட்டம். வேடசந்தூர் பயணம் மேற்கொண்டு தங்கக்காசுகளை ஆய்வு செய்தார்.

7.2.97	திருச்சி அருங்காட்சியகத்தில் கூட்டப்பட்ட காப்பாட்சியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.
18.3.97. 19.3.97	நூல்கள் பெறவும் அலுவலகப் பணிகள் சில மேற்கொள்ளவும் சென்னை பயணம் மேற்கொண்டார்.

ஈரோடு

அ. பெரியசாமி, ஈரோடு அருங்காட்சியகக் காப்பாட்சியர்

28.3.97. 29.3.97 கொடுமணல் அகழாய்விடம் சென்று ஆய்வு செய்தார்.

கோவை

கு. கருணாநிதி, கோவை அருங்காட்சியகக் காப்பாட்சியர்

7.1.97	மேட்டுப்பாளையம் வட்டம். சிறுமுகையிலுள்ள சோளக்குழி ஆய்வு
27.1.97	மேட்டுப்பாளையம் வட்டம், வெள்ளைப்பாளயத்திலுள்ள சோளக்குழி ஆய்வு
7.3.97	அவினாசி வட்டம். வேலாயுதம் பாளையத்திலுள்ள பெருங்கற்கால வரலாற்றுச் சின்னங்கள் ஆய்வு.

கடலூர்

ரு.தே. துளசிபிருந்தா, கடலூர் அருங்காட்சியகக் காப்பாட்சியர்

9.1.97	விழுப்புரம் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் உள்ள கற்சிற்பங்கள் ஆய்வு
6.2.97	காட்டு மன்னார் கோயில் புதைபொருள் ஆய்வு
13.3.97	திருக்கோயிலூர் – சோழவண்டி சமணர் படுக்கை ஆய்வு

உதகை

முனைவர் சி. மகேசுவரன், உதகை அருங்காட்சியகக் காப்பாட்சியர்

25.1.97	ஆனைகட்டிப் பகுதியில் 7 நடுகற்களும், 10 பெருங்கற்கால ஈமப் புதைகுழிகளும். 3 கல்வெட்டுகளும் கள ஆராய்ச்சியின் போது கண்டு, ஆய்வு செய்யப்பட்டன.
28.3.97	பொக்காபுரம், மகினிகுடிப் பகுதிகளில் வாழும் கசவர் பழங்குடியினரது குடியிருப்புப் பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கன்னியாகுமரி

7.2.97 திருச்சியில் காப்பாட்சியர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள பயணம்.

4.3.97 குழித்துறைக்கு பொருள் சேகரிப்பு மற்றும் ஆய்வுப் பயணம்.

10, 19, 26.3.97 கல்விப் பணிகள் தொடர்பாக நாகர்கோவிலுக்குப் பயணம்.

திருநெல்வேலி

நா. சுலைமான், திருநெல்வேலி அருங்காட்சியகக் காப்பாட்சியர்

7.2.97 திருச்சியில் காப்பாட்சியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

24.2.97 சீவலப்பேரி அருகிலுள்ள மறுகால் தலையில் சமணத்தலம். பிராமிக்கல்வெட்டு, புதிய கற்கால மக்களின் கற்கருவிகள் ஆகியவற்றையும் இராமச்சந்திராபுரத்தில் 8-ஆம் நூற்றாண்டின் குகைக்கோயில் மற்றும் சிற்பங்களையும் கண்டு ஆய்வு செய்தார்.

27.2.97 பாபநாசம். மன்னார் கோயில் சென்று கல்வெட்டுக்கள். மரச்சிற்பங்கள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்தார். திருப்புடை மருதூர் சென்று ஓவியங்களை ஆய்வு செய்து புகைப்படம் எடுத்து வந்தார்.

பயிற்சிகள்

மானிடவியல் பிரிவு

1. சென்னை. கிறித்தவக் கல்லூரி, வரலாற்றுத் துறை இறுதியாண்டு மாணவர்க்கு மானிடவியல் பிரிவுக் காட்சிக் கூடங்களில் பயிற்சியளிக்கப்பட்டது.

2. சென்னை கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத் துறை மாணவர்களை அத்திரம்பாக்கம் அழைத்துச் சென்று அரும்பொருட்களைத் தேடி சேகரித்தல், பதிவு செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

புவியியல் பிரிவு

29.1.97-4.2.97 புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் என்ற பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவன அலுவலர்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அ.செ. தொழில் நுட்பக் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அருங்காட்சியக வல்லுநர்கள் உரையாற்றினர். நிறைவு விழாவை அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., தலைமையேற்று நடத்தினார்.

விலங்கியல்

10.2.97. 11.2.97 வேலூர். ஊரிகக் கல்லூரி மாணவர்க்கு ***"விலங்கினப் பொருட்கள் பாதுகாப்பு".***

19.2.97 புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்க்கு பயிற்சி

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

20.1.97–24.1.97 தமிழ்நாடு ஆவணக்காப்பக அலுவலர்களுக்கு ***'ஆவணங்கள் பாதுகாப்பு'***-பயிற்சி வழங்கப்பட்டது.

26.1.97–31.1.97 கடலூர். கபாலீசுவரர் கோயிலில் மாணவர்களுக்கு ***கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு*** – பயிற்சி

31.1.97 ***கடலூர் அருங்காட்சியகத்தில் அரும் பொருட்கள் பாதுகாப்பு*** – பயிற்சி.

புதுக்கோட்டை

18.3.97–21.3.97 பள்ளி. கல்லூரி மாணவர்களுக்கு அருங்காட்சியகவியல் பயிற்சி.

சேலம்

8.3.97–12.3.97 கலை நலம் களித்தல் – குறுகிய காலப் பயிற்சி.

24.3.97 எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் இந்திய விளம்பரத்துறையுடன் இணைந்து நடத்தப்பட்டது.

மதுரை

24.3.97–26.3.97 கல்லூரி மாணவர்களுக்காக ***'விலங்கினப் பொருட்கள் பாதுகாப்பு'*** – பயிற்சி.

திருநெல்வேலி

15.3.96. 16.3.97 இமேஜ் புகைப்படக் கலைஞர்களுக்கு ***'கலைப்பொருட்கள், ஓவியங்கள் புகைப்படம் எடுக்கும்முறை'*** – பயிற்சி.

ஆராய்ச்சிப் பணிகள்

1. ***படிமங்களின் கைரேகை பதிவு செய்தல்,*** இந்திய அரசின் அறிவிய ல் தொழில் நுட்பத் துறையின் நிதி உதவியுடன் இந்திராகாந்தி அணு ஆய்வு மையத்துடன் இணைந்த ஆராய்ச்சித் திட்டம் (தொல் பொருளியில். வேதியப் பாதுகாப்புப் பிரிவுகள்)

2. ***முப்பரிமாணப் புகைப்படங்கள் எடுத்தல்,*** அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்த ஆராய்ச்சித் திட்டம். (தொல் பொருளியல். வேதியியப் பாதுகாப்புப் பிரிவுகள்).

3. ***தேசிய கலைக்கூடப் பராமரிப்பு,*** அமெரிக்க ஐக்கிய நாட்டு கெட்டி பாதுகாப்பு நிறுவனம். இந்திய தொழில் நுட்பக் கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சித் திட்டம் (வளர்கலை மற்றும் வேதியியப் பாதுகாப்புப் பிரிவுகள்)

4. திரு. ஜா.ரா. அசோகன். காப்பாட்சியர். வடிவமைப்புப் பிரிவு '***அருங்காட்சியகக் காட்சியமைப்பில் ஒப்புமை ஆய்வு***', நேரு அறக்கட்டளை நிதியுதவியுடன்.

5. திரு. ஜெ. இராஜாமுகமது. காப்பாட்சியர். புதுக்கோட்டை அருங்காட்சியகம். கடற்கரைப் பகுதி முஸ்லிம்களின் கடல் சார்புச் செயல்பாடுகள். பொருளாதாரம். சமூக பழக்க வழக்கங்கள். முனைவர் பட்டத்திற்காக ஆய்வு.

6. திரு. நா. சுலைமான். காப்பாட்சியர். திருநெல்வேலி அருங்காட்சியகம். ***நாயக்கர் கால ஓவியங்கள்,*** முனைவர் பட்டத்திற்காக ஆய்வு.

7. முனைவர். சி. மகேசுவரன். காப்பாட்சியர். உதகை அருங்காட் சியகம். ***முகமூடிகள்*** பற்றிய ஆய்வு நேரு அறக்கட்டளை நிதியுதவியுடன் நடைபெற்றது.

ஆராய்ச்சிக்கு உதவிகள்

மானிடவியல் பிரிவு

1. திரு. ராபர்ட் எல்கூல்ட், இலண்டன் – தஞ்சை ஆயுதச் சாலை ஆயுதங்கள்.

2. திருமதி. ஜேன் பேடர்சன். நிழல் பொம்மலாட்டக் கலை நிபுணர். இங்கிலாந்து – தோல் பாவைகள்

3. திரு. பி. மஜிம்தார், இ.வ.ப., பெங்களூர் – பழங்குடியினர்

4. முனைவர். பி. சசிசேகரன், சென்னைப் பல்கலைக் கழக தொல்லியல் துறை ஆய்வு மாணவர் – ஆதிச்சநல்லூர் இரும்புப் பொருட்கள்.

தொல்பொருள் பிரிவு

1. திரு. இராபர்ட் எல்குட். இலண்டன் – படிமங்கள், கற்சிற்பங்கள்.

2. திருமதி. எலினா, இலண்டன் – படிமங்கள். கற்சிற்பங்கள்.

3. திரு. டி. மகேந்திரன். சைதாப்பேட்டை – கற்சிற்பங்கள்.

4. செல்வி. சர்மிளா, நுங்கம்பாக்கம் – படிமங்கள்.

5. திரு. மாரிமுத்து, திருச்சி – சதிக்கற்கள்

6. முனைவர். அலிகர், பிரான்சு – படிமங்கள்.

7. முனைவர். ரா. பாலகிருஷ்ணன், சென்னை – கற்சிற்பங்கள்.

8. பேராசிரியர் கே. சிற்றம்பலம், ஸ்ரீலங்கா – கற்சிற்பங்கள்.

9. முனைவர். சீல திரிபாடி, கோவா – படிமங்கள்

10. முனைவர். எஸ்.கே. சுப்பிரமணியம், சென்னை – கற்சிற்பங்கள்

11. பேராசிரியர். பி. சண்முகம். சென்னைப் பல்கலைக் கழகம், காஞ்சிபுரம் – புத்தர் கற்சிற்பம்.

12. திரு. ஒகுரா. ஜப்பான் – புத்தர் கற்சிற்பம்

13. செல்வி. ரமா. சென்னை – விஜயநகர் சிற்பங்கள்

14. முனைவர். ரவீந்திரநாத். மும்பை – கற்சிற்பங்கள் மற்றும் படிமங்கள்

15. திருமதி. ஜயந்திரத். ஒரிஸா – உலோகக் கலை

16. திரு. நாகராஜராவ். சென்னை – மரச்சிற்பங்கள்

விலங்கியல் பிரிவு

1. திரு. சபீக் அகமது. சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் – பிளாங்டன்.

2. திரு. திவாகரன், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் – கடல்வாழ் மெல்லுடலிகள்

3. திரு. குமரன் சதாசிவம். சென்னை – பாலூட்டிகள்.

வேதியியல் பாதுகாப்புப் பிரிவு

1. திரு. கார்த்திக். சென்னைக் கட்டடக் கலைக்கல்லூரி மாணவர் – சென்னை அருங்காட்சியகக் கட்டடம் அமைப்பு

2. திரு. அரவிந்தன், புதுதில்லி பல்கலைக்கழக பாதுகாப்பு ஆய்வு மாணவர் – சென்னை அருங்காட்சியகக் கட்டடப் பாதுகாப்பு

3. திரு. டி. ஜெயராஜ், சென்னை – படிமங்களின் தொழில் நுட்பம்

மதுரை

1. செல்வி. காதரின், காமராசர் பல்கலைக்கழக மாணவி - கணனியியல்

2. திரு. ஸ்ரீகாந்த், மதுரை - தத்துவம்

3. திருமதி. அகிலா சிவசங்கரன், புதுதில்லி பல்கலைக்கழகம் - பள்ளு சமூக வரலாறு

திருச்சி

திரு. கோவிந்தராசன், தமிழ்நாடு ஆவணக்காப்பக உதவி பதிப்பாசிரியர் - திருச்சி அரும்பொருட்கள் (மாவட்ட இதழுக்காக).

ஈரோடு

1. புனித ரீட்டா உயர்பள்ளியைச் சேர்ந்த தலைமை ஆசிரியர், ஈரோடு. - கிறித்தவக் கோயில்கள்

2. திரு. நல். நடராஜன், ஈரோடு - பெரியார் மாவட்டக் கோயில்கள்

உதகை

திரு. இரா.ப. கருணானந்தம், கல்வெட்டாய்வாளர், உதகை - நீலகிரித் தொல் பழங்காலம்.

கன்னியாகுமரி

திரு. எஸ். பத்மநாபனுக்கு மாவட்டம் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டன.

திரு. தே. கோபாலன், தொல்பொருள் அலுவலர் - மாவட்டத் தகவல்கள்.

திருநெல்வேலி

1. முனைவர். பத்மநாபன். கன்னியாகுமரி - குடவறைக் கோயில்

2. செல்வி. முத்துலெட்சுமி, இக்னேசியஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, பாளை - வீரக்கற்களும், கல்வெட்டுக்களும்.

3. செல்வி. புனிதா, இக்னேசியஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. பாளை - வீரக்கற்களும். கல்வெட்டுக்களும்.

வருங்கால நிகழ்வுகள்

அனைத்துப் பிரிவுகளும்

சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்க்கு அருங்காட்சியகவியல் செய்முறைப் பயிற்சி. மே. 7 முதல்.

விலங்கியல் பிரிவு,தாவரவியல் பிரிவு

உயிரினப் பொருட்களைப் பதப்படுத்தும் பயிற்சி –ஜூன் 2–30.

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

1. அரும்பொருட்கள் பாதுகாப்பு. சொற்பொழிவு. கல்பாக்கம். மே.12.
2. அரும்பொருட்கள் பாதுகாப்பு பயிற்சி. ஜூன் 2–30.
3. கட்டடங்கள் பாதுகாப்பு. திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி. இந்திய தொல்பொருள் துறைப் பொறியாளர். ஜூன் 25.

தாவரவியல் பிரிவு

15.4.97 சித்த மருத்துவமுகாம். யோகா பயிற்சி. சிறப்புரை

20.5.97 சித்த மருத்துவமுகாம். யோகா பயிற்சி. சிறப்புரை

17.6.97 சித்த மருத்துவமுகாம். யோகா பயிற்சி. சிறப்புரை

மதுரை

ஏப்ரல் 1. அரும்பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சி. ஏப்ரல் 10. 11.

28.4.97 முதல் 27.5.97 – 13வது கோடைகாலப் பயிற்சி – காந்தி நினைவு அருங்காட்சியகத்துடன் இணைந்து.

திருநெல்வேலி

மே. 97

1. அஞ்சல் தலைகள் கண்காட்சி
2. பாதிக் ஓவியக் கண்காட்சி

ஜூன்

1. கல்வெட்டுப் பயிற்சி
2. கல்வெட்டுக் கருத்தரங்கு
3. கல்வெட்டுக் கண்காட்சி
4. தீக்குச்சியில் ஓவியங்கள் கண்காட்சி

வேலூர்

19.4.97–24.4.97 கோடை ஓவியப்பயிற்சி – கண்காட்சி

31.5.97 வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட கலை வளர்த்த திருக்கோயில்கள். கருத்தரங்கம். நூல் வெளியீடு.

25.6.97 அஞ்சல் தலைகள் கண்காட்சி

ஈரோடு

4.5.97 திப்புசுல்தான் கருத்தரங்கு. கண்காட்சி. நூல்வெளியீடு – சித்தார்த்தா பள்ளி. கலைமகள். ஐயா மீனாட்சி சுந்தரனார் ஆய்வகம். கொங்கு ஆய்வு மையம். கொங்கு நாணயவியல் ஆய்வு மையம். இன்டாக் கோவை. பெரியார் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து நடத்துவது.

6.97 பள்ளி மாணவர்களுக்கு ஓவியப்போட்டி.

வல்லுநர் குழுக் கூட்டத்தில் பங்கு பெறுதல்

முனைவர் நே. தேவசகாயம். துணை இயக்குநர். இந்திய தொல் பொருளாய்வுத் துறை கூட்டிய 'அரும்பொருட்களல்லாத பொருட்களின் ஏற்றுமதி' வல்லுநர் குழு கூட்டத்தில் 27.1.97, 3.3.97. 17.3.97 ஆகிய நாட்களில் கலந்து கொண்டார்.

திருமதி. இரா. சாந்தி. நாணயவியல் பிரிவு காப்பாட்சியர். தென்னிந்திய நாணயவியல் கழக உறுப்பினர் குழுக் கூட்டத்தில் 27.2.97 முதல் 1.3.97 வரை கலந்து கொண்டார்.

அலுவலர் மாற்றங்கள்

திரு. கோ. காளத்தி. விளக்குநராக 11.2.97 அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பணியில் சேர்ந்தார்.

திரு. க. தண்டபாணி. திருச்சி அருங்காட்சியக போலி உயிரினமாக்குபவர்.

தரம்–1. மருத்துவ விடுப்பில் சென்றதால். புதுக்கோட்டை. அருங்காட்சியக போலி உயிரினமாக்குபவர் தரம்–2. திரு. இரா. காமராஜ் 19.3.97 அன்று பதவி உயர்வு பெற்று திருச்சி அருங்காட்சியகத்தில் பணியில் சேர்ந்தார்.

சென்னையில்

கல்விப் பணிகள்

குழுக்களாக வரும் மாணவ மாணவியருக்கு விளக்கிக்கூறும் பணி செய்யப்பட்டன. படக்காட்சிகள் நடத்தப்பட்டன. சொற்பொழிவுகள், கண்காட்சிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த ஒருங்கிணைப்புப் பணிகள் கவனிக்கப்பட்டன.

சிறப்புப் பார்வையாளர்கள் வருகை

1. திருமதி. எலினா கார்டின் மற்றும் என்ஸோ போல்புஜ், வெனிசுலா.
2. முனைவர். எனாமுல் ஹக். பங்களா தேஷ் முன்னாள் தேசிய அருங்காட்சியக இயக்குநர்.
3. திரு. மாண்டேக்சிங் அலுவாலியா. இ.ஆ.ப.. இந்திய நிதித் துறைச் செயலர்.
4. பிராங் வைஸ்னர். அமெரிக்க நாட்டுத்தூதுவர்

சென்னை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை.

பார்வையிட்ட பள்ளிகளின் எண்ணிக்கை	:	441
பார்வையிட்ட மாணவர்களின் எண்ணிக்கை	:	33.828
மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை	:	1.21,791

சென்னை – 8.
30.4.97

கண். தீனதயாளன், இ.ஆ.ப,
அருங்காட்சியகங்களின் ஆணையர்.

II.கட்டுரைப் பகுதி

போஜ் பத்தர் - மரப்பட்டை

- **ம.ந. புஷ்பா**, காப்பாட்சியர்.
தாவரவியற் பிரிவு
அரசு அருங்காட்சியகம். சென்னை–8.

பெட்டுலா உட்டிலிஸ் எனும் தாவரவியற் பெயருடைய போஜ்பத்தர் மரங்கள் இமயமலையின் உயரமான பகுதிகளில், 14,000 அடி உயரத்தில் காணப்படுகின்றன. சில மலை வாழ் பழங்குடி மக்கள் இம்மரத்தின் பட்டைகளை எழுதும் தாளாகப் பயன்படுத்தியுள்ளார்கள். டாக்டர் புக்லர் என்பவர் சமஸ்கிருதப் மூல இலக்கியங்களைத் தேடி காஷ்மீர் சென்றபோது, போஜ் பத்தர் மரத்தின் பட்டைகளில் சமஸ்கிருத மூல இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளதை கண்டறிந்தார். ஆரம்பகால சமஸ்கிருத பலவரான காளிதாசர் தன்னுடைய நாடகங்களிலும் காவியங்களிலும் போஜ்பத்தர் மரப்பட்டைகளின் பயனைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். காளிதாசர் போலவே சுசுருதாவும். வராகிமிகிராவும் (கி.பி. 500–550) போஜ்பத்தர் மரத்தின் பட்டையினை அறிந்திருந்தார்கள் என்பது இலக்கியச்சான்று வழி தெரியவருகின்றன. இஸ்லாமிய மன்னர் அக்பர் தாள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தன் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தினார். இதன்பின் போஜ்பத்தர் மரப்பட்டையினை எழுதப்பயன்படுத்தும் முறை படிப்படியாக குறையத் தொடங்கியது. இந்த மரத்தின் பட்டைகளில் இருந்து கிடைக்கும் பெரிய அளவிலான தாள்களானது குடை தயாரிப்பிலும் புகைப்பிடிப்பதற்கான குழல்களிலும் பயன்படுத்தப்பட்டன.

காஷ்மீரில் உள்ள அமர்நாத்துக்கு யாத்திரை செல்லும் இந்துக்கள் கோவிலை அடையுமுன், தங்களுடைய ஆடைகளை அகற்றி போஜ்பத்தர் மரத்தின் பட்டைகளை ஆடைகளாக உடுத்திக் கொள்ளும் வழக்கமும் நிலவி வந்துள்ளது.

போஜ்பத்தர் மரத்தின் பட்டைகளை ஜம்முகாஷ்மீரிலிருந்து சுபேதார் இராமச்சந்திரன் என்பவர் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு அன்பளிப்பாக கொடுத்துள்ளார்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த போஜ மன்னரால் இந்த மரத்தின் பட்டைகளானது எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று சுபேதார் இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டு இந்த தாள்களை அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. காஷ்மீர் மக்களும், ஏனைய இந்தியர்களும் இம் மரத்தின் பட்டைகளைப் பயன்படுத்தியுள்ளனர். பனை ஓலைகளையும், தாள்களையும் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கு முன் போஜ்பத்தர் மரத்தின் பட்டைகள் தாள்களாக எழுதப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் - பயிற்சி

– தே. ஜவகர் பிரசாத்ராஜ்,
காப்பாட்சியர், புவியியல் பிரிவு,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை–600 008.

சென்னை அரசு அருங்காட்சியகத்திலுள்ள புவியியல் பிரிவின் சார்பாக ''புவியியல் பொருட்களின் முக்கியத்துவம்'' என்ற பயிற்சி முகாம், முதன் முறையாக 29.1.97 முதல் 4.2.97 வரை நடத்தப்பட்டது. சென்னை பல்கலைக்கழகத்தில், இரண்டாம் ஆண்டு முதுகலைப் புவியியல் பாடம் பயிலும் மாணவர்கள் ஒன்பது பேர் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். முனைவர். வி. சுப்ரமணியன், (கூடுதல் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை) அவர்கள் இப்பயிற்சி முகாமினைத் துவக்கி வைத்துப் பேசுகையில், இப்பயிற்சி புவியியல் மாணவர்களுக்கு இன்றியமையாத் தேவையென்றும் எதிர்காலத்தில் இப்பயிற்சி அவர்களுக்கு மிகவும் பயனளிக்குமென்றும் குறிப்பிட்டார். சென்னைப் பல்கலைக் கழக புவியியல் துறைப் பேராசிரியர் முனைவர் பி. பெரியகாளி, எண்ணெய் மற்றும் நில வாயு கழகத்தின் பொது மேலாளர் (புவியியல்) முனைவர் எ. கோவிந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். அருங்காட்சியகங்களின் துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம் அவர்கள் தலைமையுரையாற்றும் போது. அருங்காட்சியகத்தில் புவியியல் பிரிவு உதயமானது குறித்தும், புவியியல் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாறைகள். கனிமங்கள், புதைப்படிவங்கள் போன்ற அரிய மற்றும் அதன் வளமான சேகரிப்புகள் குறித்தும் விளக்கினார்.

சென்னை அரசு அருங்காட்சியகம், 1851–ஆம் ஆண்டு ''கனிமங்கள்'' என்ற ஒரு வகையான புவியியல் பொருட்களைக் கொண்டே துவக்கப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும். புவியியல் என்பது புவியை, அதாவது பூமியைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியல் ஆகும். நாம் வாழும் இப்பூமியானது பாறைகளால் ஆனவை. "கனிமங்கள்" மனித வாழ்விற்கு இன்றியமையாப் பொக்கிஷமாகும். மேலும் கனிமங்கள் தொழிற்சாலைகளின் முதுகெலும்புகளாகத் திகழ்கின்றன. புதைப்படிவங்களை பற்றித் தெரிந்து கொள்வதன் வாயிலாக நாம் பழங்காலத்தில் வாழ்ந்த விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பற்றியும் அதன் பரிணாம வளர்ச்சி குறித்தும் தெரிந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி முகாமில் பல்வேறு புவியியல் துறைப் பேராசிரியர்கள் மற்றும் புவியியல் நிறுவனங்களைச் சார்ந்த புவியியலாளர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகளும்,

அவர்களது பயிற்சி அனுபவத்தை விளக்க இந்திய புவியியல் ஆராய்ச்சி நிறுவன அருங்காட்சியகம், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் ஆய்வகம். எண்ணெய் மற்றும் நிலவாயு கழகத்தின் புவியியல் ஆய்வகம் மற்றும் ஜெம்கிரானைட் தொழிற்சாலை ஆகிய இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று, அங்கு களப்பயிற்சியும் அளிக்கப்பட்டது இப்பயிற்சி முகாமின் குறிப்பிடத்தக்க ஓர் சிறப்பு அம்சமாகும். மேலும் புவியியல் பொருட்களை எவ்வாறு சேகரிப்பது, பாதுகாப்பது, ஆவணப்படுத்துவது மற்றும் காட்சிப்படுத்துவது போன்றவைகளைப் பற்றியும் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வாறு அருங்காட்சியகத்தில். பல்வேறு புவியியல் நிறுவனங்களை ஒன்று திரட்டி. மாணவர்களோடு ஒருங்கிணைத்து. புவியியல் பொருட்களின் முக்கியத்துவத்தை அறியச் செய்வதோடல்லாமல். அம்மாணவர்கள் தங்களை எதிர்காலத்தில் சிறந்த புவியியலாளர்களாக ஊக்குவிக்கும் ஓர் அரிய வாய்ப்பினை இவ்வருங்காட்சியகத்தின் வாயிலாக அளிக்கும் உயரிய நோக்கத்தோடு இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. பயிற்சி முகாமின் நிறைவு நாளில் புவியியல் சிறப்புக்கண்காட்சியும் அமைக்கப்பட்டது. அரசு அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன். இ.ஆ.ப.. அவர்கள் தலைமையுரையாற்றுகையில் இம்மாதிரியான பயிற்சி முகாம் இனி ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் என்றார். திரு. என். பிரசன்னன். முதுநிலை புவியியலாளர். இந்திய புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அருங்காட்சியகங்களின் துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்தியப் புவியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை இயக்குநர் திரு. என். வரதன் சிறப்புக் கண்காட்சியினைத் துவக்கி வைத்து. பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி. சிறப்புரையாற்றியபோது புவியியலின் முக்கியத்துவத்தைப் பற்றியும், எதிர்காலத்தில் இம்மாதிரியான பயிற்சி முகாம்களுக்கு இந்திய புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் தனது முழு ஒத்துழைப்பை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் புவியியல் பொருட்களின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்து, அதனைத் தெரிந்து கொள்ளச் செய்யும் வண்ணம் இச்சிறப்புக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

சென்னை அருங்காட்சியகத்தில் அரும்பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சிகள்

முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர்,
வேதியியப் பாதுகாப்புப் பிரிவு,
அரசு அருங்காட்சியகம், சென்னை–8.

1851–ஆம் ஆண்டு 1100 புவியியல் பொருட்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சென்னை அருங்காட்சியகம் இன்று ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாக ஆயிரக்கணக்கான அரும்பொருட்கள். கலைப்பொருட்கள் மற்றும் அறிவியல் சார்ந்த பொருட்களைத் தன்னகத்தே கொண்டு. கல்விப் பணிகள் பல ஆற்றுவதுடன் நமது பண்பாட்டுத் தடயங்களைப் பின் சந்ததியினர்க்கு அழியாமல் பாதுகாத்து வருகிறது. இது தவிர, மாவட்டங்களில் 12 அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. அரும்பொருட்களைப் பாதுகாக்கும் வண்ணம் 1930–ஆம் ஆண்டிலேயே சென்னை அருங்காட்சியகத்தில் வேதியியப் பாதுகாப்புக் கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள். பாதுகாப்புப் பணிகள் எனப் பல்வேறு பணிகளை இவ்வாய்வகம் மேற்கொண்டாலும் பயிற்சிப் பணியினையும் சிறப்பாக ஆற்றி வருகிறது.

அரும்பொருட் பாதுகாப்புப் பயிற்சிகள்

இவ்வாய்வகம் ஆசியாவிலேயே முதன்முறையாக வேதியியப் பாதுகாப்புப் பயிற்சியைத் தொடங்கிய பெருமையுடையது. 1974–ஆம் ஆண்டு முதல் பயிற்சியைத் தொடங்கி. தனது பெயரை நிலை நிறுத்தியுள்ளது. அரும்பொருட்பாதுகாப்பு, கோயில் அரும்பொருட்பாதுகாப்பு. ஆவணங்கள் பாதுகாப்பு. மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பயிற்சிகள். நீண்டகாலப் பயிற்சிகள் எனப் பல்வேறு பயிற்சிகளை நடத்தி, நமது கலைச் செல்வங்களைப் பாதுகாக்கும் பணியில் இத்துறை முன்னோடியில் உள்ளது.

அரும்பொருட்பாதுகாப்பு - புத்தொளிப் பயிற்சி

1974–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி கடந்த 23 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று, இதுவரை ஏறத்தாழ 200 பயிற்சியாளர்களை உருவாக்கியுள்ளது. இப்பயிற்சி இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வரும் 10 பேருக்கு ஒரு மாதகாலம் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் விரிவுரைகளும், விளக்க உரைகளும், செயல்முறைப் பயிற்சிகளும் வல்லுநர்களால் வழங்கப்படுகின்றன. நிறைவில்

பயிற்சியாளர்களால் பாதுகாக்கப்பட்ட அரும்பொருட்கள் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு

1995–ஆம் ஆண்டு இந்து அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையரின் வேண்டுகோளின்படி கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு என்ற பயிற்சி கோயில் செயல் அலுவலர்கள் பத்துபேருக்கு நடத்தப்பட்டது. இது ஒரு புதிய முயற்சியாகும். ஒரு வாரகாலம் மட்டுமே நடத்தப்பட்ட இப்பயிற்சியும் கோயில் அரும்பொருட்களைப் பாதுகாப்பதற்கான நெறி முறைகளைக் கற்றுக் கொடுத்து பயிற்சியாளர்களே செய்முறையில் அரும்பொருட்களைப் பாதுகாக்க வழிவகைகளை உருவாக்கியது. இன்று இப்பயிற்சியினால் இந்து அறநிலைய ஆட்சித்துறையில் பணியாற்றும் செயல் அலுவலர்களின் கீழ் உள்ள கோயில்களில் உள்ள அரும்பொருட்கள். ஓவியங்கள் போன்றவற்றைச் சிறப்பாகப் பேண நடவடிக்கை எடுக்கப்படுகிறது மட்டுமல்லாமல் அவர்களின் அழைப்பின் பேரில் வேதியியப் பாதுகாப்பு காப்பாட்சியரும் சென்று பல்வேறு பாதுகாப்புத் திட்டங்களை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்து வருகிறார்.

ஆவணங்கள் பாதுகாப்பு

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி நிறுவனமும் அரசு அருங்காட்சியகமும் இணைந்து 1997 – ஜனவரித் திங்களில் 10 ஆவணக் காப்பக அலுவலர்களுக்கு ஆவணங்களைப் பாதுகாப்பதிலுள்ள வேதியிய மற்றும் பௌதிக நுணுக்கங்களை ஒரு வார காலப் பயிற்சியின் வழி கற்றுக் கொடுத்தன. இப்பயிற்சி ஏற்கெனவே 'ஆவணங்களின் மேலாண்மைப் பயிற்சி' என ஆவணக்காப்பகத்தால் நடத்தப்பட்டு வரும் பயிற்சிக்கு புதிய வேகத்தை அளிப்பதோடன்றி, ஆவணக்காப்பகத்தின் பணிகளில் ஒரு புதிய சக்தியைக் கொடுத்துள்ளது.

நீண்ட காலப் பயிற்சி - உட்பயிற்சி

சமீபத்தில் வேதியியப் பாதுகாப்புப் பிரிவில் இருவருக்கு ஓராண்டு காலத்திற்கு உட்பயிற்சி (Internship) வழங்கப்பட்டு வருகிறது. ஒருவர் ஓவியங்கள் பராமரிப்பிலும். இன்னொருவர் துணிகள் பராமரிப்பிலும் 1996, ஆகஸ்டு முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். இதன் நோக்கம் தனியாரும் அரும்பொருட்களைப் பாதுகாப்பதில் வல்லுநராகி நமது கலை மற்றும் பண்பாட்டுச் செல்வங்களைப் பராமரிக்க உதவுவதாகும்.

மாணவர்களுக்குப் பயிற்சி

கல்லூரி மற்றும், பள்ளி மாணவர்களுக்கும் சென்னையிலும் மாவட்டங்களிலும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இதன் நோக்கம், மாணவர்களுக்கு

நமது பண்பாட்டுச் செல்வங்களைப் பற்றியும் அவற்றைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் தெரிவிப்பதாகும். மாணவர்களுக்கு சில வேதியியப் பாதுகாப்பு யுக்திகளைக் கற்றுக் கொடுத்து அவர்களின் உதவியுடன் அரும்பொருட்கள் இப்பயிற்சியின் வழி பேணப்படுகின்றன.

பொதுமக்களுக்குப் பயிற்சி

கோயில்கள் அரும்பொருட்கள் நிரம்பியுள்ள இடங்களாக இருக்கின்றன. பல்வேறுவிதங்களில் கோயில்களின் சிற்பங்கள், ஓவியங்கள், அரும்பொருட்கள் போன்றவை பாதிக்கப்படுகின்றன. எனவே, நிர்வாகத்தின் வேண்டுதலின் பேரில் கிராமப்புறங்களுக்குச் சென்று கிராமமக்களுக்கும் கோயில் அரும்பொருட்களைப் பாதுகாக்க பயிற்சியளிக்கப்படுகிறது. சமீபத்தில் கடலூர், பாடலீசுவரர் கோயிலில் இப்பயிற்சி நடைபெற்றது. 250 பேர் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெளியீடுகள்

இப்பயிற்சிகள் ஒரு சிலருக்குத்தான் வழங்கப்படுகின்றன. அரும்பொருட்கள் பாதுகாப்பு நெறிமுறைகளை யாவரும் அறிந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு தமிழ் மொழியிலேயே பல்வேறு பாதுகாப்பு தொடர்பான கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. மட்டுமின்றி இவ்வருங்காட்சியகத்திலேயே, அருங்காட்சியகங்களில் பாதுகாப்பு. அரும்பொருட்கள் பாதுகாப்பு. ஆவணங்கள் பாதுகாப்பு, கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு என்ற நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. நமது கலை மற்றும் பண்பாட்டு எச்சங்களைப் பாதுகாக்கும் இம்மாபெறும் பணியினை இத்துறை சிரமேற்கொண்டு. பயிற்சி வழி பலரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தி வருவது எமக்கு பெரும் உவகையளிக்கிறது.

மலையடிக்குறிச்சியில் மக்கள் குறை தீர்க்கும் பாண்டியர்கால ஊற்றுக் கிணறு

– நா. கலைமான், காப்பாட்சியர்.
அரசு அருங்காட்சியகம். திருநெல்வேலி.

பழங்காலத் தமிழக அரசர்கள் மக்களின் குறை தீர்க்கச் செய்த அறப்பணிகள் பலவாகும். மக்களுக்காக அன்னசாலைகள், சத்திரங்கள், நீர்நிலைகள். கல்விச் சாலைகள், மருத்துவச் சாலைகள். போன்றவற்றை ஏற்படுத்தியுள்ளமை. கல்வெட்டுக்கள். இலக்கியங்கள் முதலிய பல்வேறு சான்றுகளின் மூலம் அறிய முடிகிறது.

இவற்றில். பண்டைய அரசர்கள் பாசனத்திற்காகவும் குடிநீருக்காகவும் செய்த பணிகள் இன்றும் குறிப்பிடத்தக்க வகையில் தமிழ் நாட்டில் ஆங்காங்கே நிலைத்து நின்று. இன்றும் மக்களுக்குப் பயன்படுகின்றன. மழைக் காலத்தில். மழை நீர் ஒன்று சேரும் பகுதிகளை ஆய்ந்தறிந்து அப்பகுதிகளில் பாசனத்திற்காக பெரும் குளங்களை வெட்டி, அவற்றில் பெரும் கரைகளில் மடைகளையும் கலிங்குகளையும் அமைத்து. சீரிய முறையில் நீர்ப்பாசனம் செய்திருக்கின்றனர். பல இடங்களில் நீர் நிலைகளைக் குடிநீர்க்குளம், நீர்ப்பாசனக் குளம், ஆடுமாடுகளுக்கான குளம் என்று பிரித்து வைத்தனர். இவற்றை வேறு வகைக்காகப் பயன்படுத்தியோர் தண்டனைக்குள்ளாக் கப்பட்டனர். இக்குளங்களைச் செப்பனிடும் பணிகளும் முறையாக அவ்வப்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசும். ஊர்ச்சபையும் இதற்குத் தேவையான நிதி உதவி அளித்துள்ளன. பாண்டிய நாட்டில் விஜய நாராயணம். குள்ளபுரம் போன்ற பகுதிகளின் குளங்களில் இருந்து பிடிக்கப்பட்ட மீன்களை விற்ற பணத்தின் மூலம் அவை சீர்படுத்தப் பெற்றுள்ளது தெரிய வருகிறது.

மலையடிவாரங்களில் உள்ள நீர்ஊற்றுக்களைப் பயனுள்ள வகையில் மாற்றி அவ்வூற்றுக்களிலிருந்து நீர் வீணாகாமல் ஊர்மக்களின் குடிநீருக்கும் பயன்படுத்த ஏற்பாடுகள் அக்காலத்தில் செய்யப்பட்டுள்ளன. கொங்கு நாட்டில் உரோகடம் போன்ற இடங்களில் சுடுமண் குழாய்கள் மூலம் ஊருக்கு குளங்களில் இருந்து நீரை எடுத்து வந்துள்ளனர். அக்குழாய்களின் மீது தமிழ் எண்களை எழுதி. முறையாக அவற்றைப் பூமிக்கடியில் புதைத்து, தண்ணீர் எடுத்துச் சென்று இருப்பது குறிப்பிடத்தக்கது. பல இடங்களில் குடிநீருக்காக கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டில் இது போன்ற பழமையான கிணறுகள் இன்றும் பாண்டியன் கிணறு என்று அழைக்கப்பட்டு வருகின்றன; இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

ஆற்றோரங்களிலும் கடலோரங்களிலும் இருந்த பகுதிகளில் உறைக் கிணறுகள் குடிநீருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வழக்கம் தமிழ் நாட்டில் சங்ககாலம் தொட்டே

இருந்து வந்துள்ளதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. பட்டினப்பாலையில் உறைக் கிணறுகள் இருந்த பகுதி உறைக் கிணற்றுப் புறச்சேரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அக்காலத்திலேயே நிலத்தடியில் நீர் உள்ள பகுதிகளைக் கண்டறியும் வல்லுநர்கள் இருந்துள்ளமையை அக்காலத்தில் எழுதப்பட்ட "கூவ நூல்" விளக்குகின்றது. வறட்சி நிலவிய காலத்தில் குடிநீருக்காக நிலத்தடியில் இருந்த நீர்ஊற்றுக்களைக் கண்டறிந்து, அவ்விடங்களில் கிணறுகளையும் குளங்களையும் தோற்றுவித்திருக்கின்றனர். இவ்வாறு எடுக்கப்பட்ட ஊற்றுக் கிணறுகளும், குடிநீர் குளங்களும். சில காலத்திற்கு மட்டுமே பயன்படுவதற்கு என்றில்லாமல், நீண்ட காலம் பயன்படும் வகையில் தொலை நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளதற்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன.

இதற்கு எடுத்துக்காட்டாக. நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள மலையடிக் குறிச்சி என்னும் ஊரிலுள்ள பாண்டியர் காலத்து பழமையான ஊற்றுக் கிணறு விளங்குகின்றது. இவ்வூரில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் செழியன் சேந்தன் எடுப்பித்த குடவரைக் கோவிலுக்கு அருகில் மலையடிவாரத்தில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அப்பகுதியை ஆண்டு வந்த சுந்தர பாண்டியன் ஆட்சியில் மலையடிக்குறிச்சி மக்களுக்குப் பயன்படும் வகையில் இது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனை சுந்தரபாண்டியனின் அதிகாரியாக விளங்கின தனியானை திருவெண் காடுடையான் தமிழ் தலையன் என்பான் சுந்தரபாண்டியனின் 2–வது ஆட்சியாண்டில் கி.பி. 1314–ஆம் ஆண்டில் எடுப்பித்துள்ளார். மலையடிக்குறிச்சி ஊற்றுக் கிணறு என்று இதற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. இன்றும் அழியாது மலையடிக்குறிச்சியில் விளங்கும் அக்கிணற்றை அகப்பைக் கிணறு என்று அவ்வூர் மக்கள் அழைத்து வருகின்றனர். அக்கிணற்றினருகில் நடப்பட்டுள்ள தமிழ்க்கல் வெட்டு மூலம் ஊற்றுக்கிணற்றின் தோற்றம் பற்றிய செய்தியை அறிய முடிகின்றது. இதில் வியப்பு என்னவென்றால் இத்தனை ஆண்டுகள் கடந்த பின்பும் கூட இவ்வூற்றுக் கிணறு மக்களுக்கு வற்றாமல் நீரை வழங்கி வருவதுதான். தொலை நோக்குடன் வெட்டப்பட்ட இவ்வூற்றுக் கிணறு அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போல் இன்றும் அவ்வூர் மக்களுக்கு நீரை அளித்து வருகின்றது.

மலையடிக்குறிச்சி ஊற்றுக் கிணற்றில் மக்கள் நீரை மேலிருந்து இறைத்து தொல்லைப்படக் கூடாது என்பதற்காக அதனைத் தோற்றுவித்த திருவெண் காடுடையான் சரிவான படிக்கட்டுக்களையும் அவ்வூற்றுக் கிணற்றுக்குள் செல்லும் வகையில் அமைத்துள்ளான். நீர் குறைவாக இருக்கும் காலத்தில் கூட அகப்பையினால் இவ்வூற்றில் இருந்து நீரை எடுத்துள்ளார்கள் என்பதால் இதனை அகப்பைக் கிணறு

எனவும் மக்கள் அழைத்து வருகின்றனர். பிற்காலத்தில் இப்படிக்கட்டு அகற்றப்பட்டு, கிணற்றைச் சுற்றிலும் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இக்கிணற்றருகில் கம்பீரமாக நின்று பறைசாற்றும் பாண்டியன் கல்வெட்டு மூலமும் இன்றும் இந்த ஊற்றுக் கிணற்றின் பழமையையும் பெருமையையும் அறிய முடிகின்றது. அக்கிணற்றின் அருகில் நடப்பட்டுள்ள கல்வெட்டின் வாசகம் வருமாறு:

1. சகாப்தம் உ ள ய சா
2. ஸ ஸ ஸ்ரீ கோச்ச
   வ த
3. டைய பன்மரான
4. (திரிபு) வனச் ச(க்ர) வத்தி
5. கள் ஸ்ரீ சுந்தர பாண்டி
6. (ய) தேவற்கு யாண்டு
7. (ய) 2 வது மலையடிக்
8. குறிச்சி ஊற்றுக்கிணறு
9. தனியான திருவண்
10. காடுடையா ன
11. தமிழ தரையன் தன்
12. மம் (சுபமஸ்து)

(அடைப்புக் குறிக்குள் உள்ள எழுத்துக்கள் கிரந்த எழுத்தில் உள்ளன).

பல நூறு ஆண்டுகள் கடந்த பின்பும் இவ்வூற்றுக் கிணறு எந்த நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டதோ அந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் நிறைவேற்றி வருவது தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

வேலூர், அரசு அருங்காட்சியகத்தில் திருமகள் மற்றும் மூதேவி கற்சிலைகள்

– **ம. காந்தி**, காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், வேலூர்.

வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் முக்கியமான ஆறு பாலாறு ஆகும். பாலாற்றில் தென்கரையில் கழனிப்பாக்கம் என்ற மிகப் பழமையான ஊர் திகழ்கிறது. கழனிப்பாக்கம் வேலூருக்கு மேற்கே 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கழனிப்பாக்கம் ஒரு சிவன் கோயிலையும் ஒரு ஏழு கன்னியர் கோயிலையும் கொண்டுள்ளது. ஆனால். விஷ்ணு கோயில் நெடுநாட்களுக்கு முன்னர் அழிந்து விட்டதாகத் தெரிகிறது. கழனிப்பாக்கத்தில் உள்ள கோயில்களை ஆய்வு செய்யும் நோக்குடன் சென்ற பொழுது அவ்வூரின் சிவன் கோயில் தெருவில் வசிக்கும் மக்கள், அத்தெருவின் கடைசியில் கால்வாயில் ஒரு கற்சிலை உள்ளது என்றனர். அங்கிருந்த ஒரு கல்லைப் புரட்டிப் பார்த்தபோது அது ஒரு மூதேவியின் சிலை எனத்தெரிந்தது. பிறகு. அதே கால்வாயிலிருந்து 100 அடி மேற்கில் ஒரு தலையற்ற திருமகள் சிலை காணப்பட்டது. இந்த இரண்டு சிலைகளும் இருந்த இடங்களுக்கு நடுவில் ஓர் அரசமரத்தடியில் ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலின் முன்பக்க மேடை அமைக்கப் பல கற்களைப் பயன்படுத்தியுள்ளனர். அக்கற்களுள் ஒன்று தலையும் பாதங்களும் அற்ற கல் உருவம் ஆகும். அதனுடைய அமைப்பைக் கவனித்தால் அது ஒரு விஷ்ணு உருவம் போல் தெரிகிறது. மேலே கூறிய திருமகளின் உருவத்தை நோக்கினால் இந்த சிதைந்த விஷ்ணு சிலை, அரங்கநாதர் சிலையாக இருக்க வேண்டும் என்ற கருதமுடிகிறது.

மேற்கண்ட இரண்டு தேவி கற்சிலைகளும் வடார்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப.வி.ச. டேவிதர், இ.ஆ.ப., அவர்களின் அனுமதியுடனும் தமிழ்நாட்டு அரசு அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அவர்களின் ஆணையின்பேரிலும் வேலூர், அரசு அருங்காட்சியகத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

திருமகள் சிலை

திருமகள் சிலையின் உயரம் 83 சென்டிமீட்டர்; அகலம் 44 சென்டி மீட்டர். இச்சிலையின் தலை சிதைந்துள்ளதால் திருமகளின் முக அழகு நமக்குத் தெரியவில்லை. சிலையின் மார்பின் மேற்பகுதியை அகன்ற கற்கள் பதித்த அணிகலன் அழகு செய்கிறது. சன்னவீரம் மார்பிலிருந்து வயிற்றுப் பகுதிக்கு இறங்கி இரண்டாகப் பிரிந்து இடுப்பின் இரு பக்கங்களிலும் செல்கிறது. சன்னவீரம் இரண்டாகப்பிரியும் இடத்தில் ஒரு தொங்கல் அழகாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. திருமகளின் மார்பகங்களை மறைக்கும் கச்சை அகன்று காணப்படாமல் பெரிய நூல் அளவில் காட்டியுள்ளனர். கைகளின் மேல் பகுதியில் கங்கணங்கள் உள்ளன. வலது கையின் முட்டியில் ஒரு காப்பு அணி செய்கிறது.

ஒவ்வொரு கையிலும் நான்கு வளையல்கள் இருக்கின்றன. வலது கை சதுர பீடத்தின் மீது கைவிரல்கள் கீழ் நோக்கியவாறு வைத்திருக்கிறது. இடது கையானது நன்கு மலர்ந்த ஒரு தாமரையை மார்புக்கருகில் பிடித்திருக்கிறது. இடது கால் குத்தக்கால் இட்டு பீடத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. வலது கால் பீடத்திலிருந்து தொங்குகிறது. பீடத்தில் கால்களுக்கிடையில் தொங்கும் ஆடை இயல்பாகக் காட்டப்பட்டுள்ளது. திருமகளின் தலையை உடைத்தவர்கள் வலது காலையும் உடைத்து விட்டனர். எனினும் வலது கையை உடைக்க வலது கையின் தோளிலும் வலது கையின் மணிக்கட்டிலும் சிற்றுளியால் துளையிட்டுள்ளது நன்குத் தெரிகிறது. நல்ல வேளையாகக் கையை உடைக்கவில்லை. வலது காலை உடைத்தப் பகுதியை உற்றுக் கவனித்தால் காலை உடைக்க ஆறு சிற்றுளித் துவாரங்கள் இடப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தெரிய வருகிறது. ஆனால், சிலையைச் சிதைத்தவர்கள் கைகளை உடைக்கவில்லை. இடது கை இல்லை எனில் என்ன சிலை என்று அறிய சற்றுக் கடினமாக இருந்திருக்கும். கலைப்பாணியின் அடிப்படையில் நோக்கினால் திருமகள் சிலை கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வடித்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

மூதேவி

மூதேவி சிலையின் உயரம் 104 சென்டி மீட்டர்; அகலம் 44 சென்டி மீட்டர். தேவியின் தலையை வட்டமான அணியாக தலைமுடியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. முகம் சதுர வடிவில் தட்டையாக செதுக்கப்பட்டிருக்கிறது. நீள்காதுகளில் மகர குண்டலங்கள் அணிசெய்கின்றன. கழுத்தில் ஆரம் நீள் பதக்கங்களாக உள்ளன. தோள்களைச் சன்னவீரம் அழகு செய்கிறது. கைகள் தொடை மீது நிற்கின்றன. தேவி உட்கார்ந்திருக்கும் நிலை; கைகள் தொடைகளின் மீது வைத்திருக்கின்ற பாங்கு மார்பகங்களின் அமைப்பு, குறுகிய வயிறு. அகன்ற இடை போன்றவை மூதேவியின் உருவம் இது என்று நிலை நிறுத்துகின்றன. தட்டையான முக அமைப்பு தோள்கள் செதுக்கப்பட்ட நிலை கழுத்தின் ஆரம் கீழ் ஆடையை பிடிப்பாகக் கட்டியிருக்கும் இடுப்பு அணிகலன் ஆகியன நொளம்பர் பாணியைப் பகர்கின்றன.

இந்த அரிய சிலைகள் சமீபத்தில் வேலூர், அரசு அருங்காட்சியகம் பெற்ற அரிய கலைச் செல்வங்களாகும்.

References

1. Srinivasa Desikan, V.N · Guide to the Bronze Gallery, Government Museum, Madras, 1983.
2. Karl Kandalvala and Archana Roy : Sculpture, Marg, Vol. XXX VIII, No.3, Bombay.
3. Krishnamurthi. K : Nolamba Sculptures - Cultural Study, Sundeep Prakashan, Delhi, 1987.
4. Rao. Gopinath T.A. : Elements of Hindu Iconography, Vol I. II.
5. Sivaramamurti. C. : South Indian Bronzes, Lalit Kala Academy, New Delhi.
6. Srinivasan P.R. : Bronzes of South India, Madras, 1994.

புகிரி -நீலமலை ஆதிக்குடிச் சமுதாயத்தினரது மரபார்ந்த துளை இசைக்கருவி

– முனைவர் சி. மகேசுவரன், காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், உதகை.

அ. 'புகிரி' - நீலமலையின் மரபார்ந்த துளை இசைக்கருவி

நிலமலையின் சில ஆதிக்குடிச் சமுதாயத்தினரான தொதவர், கோத்தர், குறும்பர், இருளர், மற்றும் படுகர் ஆகியோரிடையே காணலாகும் புகிரி எனும் துளை இசைக்கருவி ஒருவகை மூங்கிலாலான நீண்ட புல்லாங்குழலினை ஒத்த ஒரு மரபார்ந்த இசைக்கருவியாகும். இம்மரபார்ந்த இசைக்கருவி நீலமலை பண்பாட்டு மண்ணிற்கே உரிய ஒன்று.

ஆ. நீலமலை ஆதிக்குடிச் சமுதாயத்தினருடைய 'புகிரி' இசைக்கருவியில் காணலாகும் வேறுபாடுகள்

பொதுவாகப் புகிரி செய்தற்கு எதிரெதிராக அமையப்பெற்ற இடையீட்டுக் கணுக்கள் கொண்ட ஒரு நீண்ட, மெல்லிய மூங்கில் தண்டு தெரிவு செய்யப்படுகிறது. இத்தகைய மூங்கில் தண்டில் பழுக்கக் காய்ச்சிய கூர்முனை இரும்புக்குச்சியின் உதவியால் சீரான இடைவெளிவிட்டு ஐந்து அல்லது ஆறு துளைகள் போடப்பெறுகின்றன. எனினும், தமக்குரிய புகிரி இசைக்கருவியை வடிவமைப்பதில் நீலமலை ஆதிக்குடிச் சமுதாயத்தினர் ஒருவருக்கொருவர் பல வகைகளில் வேறுபடுகின்றனர். எடுத்துக்காட்டாக, எதிரெதிராக அமையப்பெற்ற இடையீட்டுக் கணுக்களைச் சரிவான வகையில் கீழ்நோக்கு நீட்சிகளாக அமையுமாறு குறும்பப் பழங்குடியினர் வெட்டிவிடுகின்றனர்; மாறாக, ஏனைய பிற நீலமலை ஆதிக்குடிச் சமுதாயத்தினர் இவ்விரு இடையீட்டுக் கணுக்களையும் பிறை வடிவிலான வளை நீட்சிகளாக அமைத்து வெட்டுகின்றனர்; இவ்வாறாகப் பிறை வடிவில் அமைக்கப்பெற்ற வளை நீட்சிகளைப் படுகு இனக்குழுவினர் தமது தாய்த் தெய்வமாகிய ஹெத்தை அம்மனுக்குரிய புனித எருமையின் நீண்ட கொம்புகளின் குறியீட்டமர்வாகக் கருதுகின்றனர். இப்புகிரி இசைக்கருவிக்குப் பளபளக்கும் தோற்றம் உருவாக்கிடத் தொதவப் பழங்குடியினர் வெண்ணையாலும் மற்றையோர் எண்ணையாலும் மெருகூட்டுகின்றனர். புகிரியின் பருமனைவிடச் சற்று அகன்ற, உள்கூடான, கூம்பு வடிவ மூங்கில் பகுதி[1] ஒன்றைப் புகிரியின் பின்புறத்தில் தொதவப் பழங்குடியினர் இணைத்துச் சிறப்பாக இசை உருவெடுக்குமாறு செய்கின்றனர். புகிரியின் ஆறு துளைகளுள் ஒன்றைப் படுகு மாந்தர் நிரந்தரமாக அடைத்து விடுகின்றனர். மாறாக

ஏனைய சமுதாயத்தினர் புகிரியை இசைக்கும்போது ஒரு துளையை விரலால் மறைத்துக் கொண்டு எஞ்சிய ஐந்த துளைகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர். தோதவர், கோத்தர், குறும்பர், இருளர் மற்றும் படுகர் முதலியோரிடையே இத்துளை இசைக்கருவி பயன்பாட்டில் இருப்பினும் இன்றைய நிலையில் படுகு சமுதாயத்தினரே இதைப் பெரிதும் இசைப்போராகத் திகழ்கின்றனர். புகிரி இசைத்தலில் தத்தமக்குள்ள தனித் திறன்களைத் தோதவர் தமது ஓய்வு நேரங்களின் போது போட்டி போட்டுக் கொண்டு வெளிப்படுத்துகின்றனர்; படுகரோ, இப்புகிரியைத் தமது சமுதாய - சமய ஒழுகலாறுகளினுள் பொதிந்து வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, வலியால் அரற்றும் நோயாளியை ஆற்றுவதற்கும் இறந்துபோன தமது உறவினரது வீட்டருகே வருத்தத்துடன் குழுமியுள்ள உறவின்முறையினரைத் தேற்றுவதற்கும் அழும் குழந்தை ஆழ்ந்த உறக்கத்தை அரவணைப்பதற்கும் படுகர் இப்புகிரியை இசைக்கின்றனர். மேலும், முன்னரே குறிக்கப்பட்டாற்போல, படுகு சமுதாயத்தினர் இத்துளை இசைக்கருவியைத் தமது தாய்த் தெய்வமாகிய ஹெத்தை அம்மனோடு தொடர்புடையதாகக் கருதுதலால் இதைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர்; இன்னும் கூறுவதாயின், படுகரது 'உலகியல் நோக்கில்'[2] ஹெத்தை அம்மனின் குறியீடாகவே இப்புகிரி கருதப்படுகிறது எனலாம்; சுருங்கக் கூறின், படுகு ஆடவர் இரவு நேரத்தின்போது மட்டுமே தமக்காகவோ சமுதாய–சமயக் குழுமுதலுக்காகவோ வாய்ப்பாட்டின் துணை இசைப்பிற்காகவோ புகிரியை இசைக்கின்றனர் என்று கூறலாம். இத்துளை இசைக்கருவியை இசைப்பதன் வாயிலாகத் தோதவர் தமது வாழிடத்தைச் சுற்றியுள்ள தம் எருமை மந்தைகளையும் பல வேறு காட்டு விலங்கினங்களையும் வசியப்படுத்தியதாகக் கூறப்பெறுகிறது. மேலும், இப்புகிரியினால் 50–க்கும் மேற்பட்ட பலவகை மெட்டுக்களைத் தோதவர் இசைக்கவல்லோராக விளங்கினர் எனவும் கூறப்பெறுகிறது. தற்போது, படுகரைத் தவிர பிற சமுதாயத்தினருள் வெகு சிலரே இத்துளை இசைக்கருவியை இசைக்கும் திறனுடையோராக விளங்குகின்றனர். இருளப் பழங்குடியினரிடையே இவ்விசைக்கருவியை இசைத்தல் படிப்படியாக பயிலப் பெறுகிறது; ஒப்பு நிலையில் புகிரியை விட எளிதான நாகசொரெ[3] எனும் துளை இசைக்கருவியை இருளன் ஒருவன் மிகச் சிறப்பாக இசைக்கப் பயின்ற பிறகே அவன் புகிரியை இசைத்தற்குப் பயில அனுமதிக்கப்படுகிறான்; ஏனெனில், புகிரியை இசைத்தற்கு 'வாயறை காற்றுத் திறனை'[4] மெதுவாகவும் சீராகவும் தொடர்ச்சியாகவும் வாயறைக்குள்ளாகவே இருத்திட வேண்டியுள்ளது. இத்தகைய, தடையற்ற வாயறைக் காற்றுத் திறனை வழங்கிடுதற்கு வாய்ப்பாக புகிரியை இசைப்போர் தமது வலப்பக்கக் கன்னத்தினுள் காற்றைத் திரட்டி, வாய் புறத்திலிருந்து காற்று ஓட்டத்தை மெதுவாகவும் அதே நேரத்தில் சீராகவும் வெளிப்படுத்துகின்றனர்.

இ. புகிரி இசையின் தன்மை

புகிரியிலிருந்து வெளிப்படும் இசையின் தன்மை விவரிக்க இயலாத ஒன்று. இருப்பினும். தீப்பற்றி எரியும்போது ஏற்படும் ஓசையுடன் அல்லது பம்பரம் சுழலும்போது ஏற்படும் சீறல் ஓசையுடன் அல்லது தொடர்ந்து சங்கு ஊதும்போது ஏற்படும் இதமான ஓசையுடன் புகிரியிலிருந்து வெளிப்படும் இசையை ஒருவாறாக நாம் ஒப்பிடலாம். இத்தகைய வசியப்படுத்தும் புகிரி இசை நீலமலையின் ஆதிக்குடிச் சமுதாயத்தினரது செவிப்புலனுக்கு மட்டுமல்லாது பொதுமக்களின் செவிப் புலனுக்கும் ஒரு சீரிய விருந்தாக அமைகிறது எனலாம்.

ஈ. புகிரி குறித்து இதுவரை செய்யப்பெற்றுள்ள ஆவணமாக்கலும் ஆராய்ச்சிப் பணிகளும்

நீலமலையின் முதல் ஆணையாளரான[5] ஜே. டபிள்யூ. பிரீக்ஸ் தமது நீலமலையின் தொல்பழங்குடியினரும் தொல்சின்னங்களும் எனும் நூலில் (1873) புகிரி குறித்து ஒரு தெளிவான விளக்கக் குறிப்பை அளித்துள்ளார்.

1960–களில் தன்னிலை மாந்தவியலாளரான ஃபிலோ இருதயநாத் படுகர் புகிரி இசைத்ததை ஒளிப்பட ஆவணமாக்கல் செய்துள்ளார்.

தொதவப் பாடல்கள் (1971) எனும் தமது நூலில் புகழ்பெற்ற ஒப்பியல் திராவிடவியலாளரான எம்.பி. எமனோ புகிரி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

எம்.பி. எமனோவும் டி.பர்ரோவும் 1984–இல் வெளியிடப்பெற்ற திராவிடச் சொற்பிறப்பியல் அகர முதலி (திருத்திய பதிப்பு) எனும் தமது தொகுப்புப் படைப்பில் தொதவா, கோத்தா, குறும்பா, இருளா மற்றும் படுகு முதலியவற்றில் காணலாகும் புகிரி குறித்த உறவுடைச் சொற்களைத் தவறாது பதிவு செய்து ஆவணப்படுத்தியுள்ளனர்.

கோயம்புத்தூரிலுள்ள பாரதி பழங்குடியினர் மற்றும் ஊரக முன்னேற்ற நிறுவனத்தின் நிறுவனர் – இயக்குநரான பேரா. தேவராஜன் கோயம்புத்தூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்குத் தாம் கொடையாக அளித்த நீலமலைப் பழங்குடியினரது கலைப் பொருள்களுள் ஒன்றாக 'இருளப் பழங்குடியினரது புகிரி'யை வழங்கிட, அவ்விசைக்கருவி பின்னர் நீலமலை மாவட்ட அரசு அருங்காட்சியக இருப்பிற்கு மாற்றப்பெற்று அங்குக் காட்சிப்படுத்தப் பெற்றுள்ளது.

பின்னர், 1996–இல் நீலமலை மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்கென 'படுகரது புகிரி' ஒன்று கோத்தகிரி மாவட்டம் கண்ணேரிமுக்கு படுகர் குடியிருப்பைச் சார்ந்த திருமிகு கக்கி (என்கிற) சண்முகம் அவர்களிடமிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரது நேர்முக எழுத்தரான திருமிகு அஜ்ஜன் அவர்களின் சீரிய முயற்சியால், கொடையாகப் பெறப்பட்டு. காட்சிப்படுத்தப் பெற்றது.

1997–இன் தொடக்கத்தில், 'தொதவப் பழங்குடியினரது புகிரி' ஒன்று உதகை வானொலி நிலைய ஒலிபரப்பு வல்லுநரான திருமிகு. டி. மோகன் – அவர்களிடமிருந்து 'இடையீட்டுக் கடனா'[7]கப் பெறப்பட்டு, நீலமலை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப் பெற்றது.

மார்ச்சு, 1997–இல் உதகை வானொலி நிலையம் தொதவப் பழங்குடியினரது 'புகிரி இசைப்பினைத்' தொதவச் சமுதாயப் பணியாளர் திருமிகு. யூ. கொட்ராடக் குட்டன் அவர்களைக் கொண்டு ஒலிப்பதிவு செய்து, பிறகு ஒலிபரப்பியது.

மிக அண்மையில் (அதாவது, ஏப்ரல், 1997–இல்), உதகை வானொலி நிலைய ஒலிபரப்பு வல்லுநர் திருமிகு டி. மோகன்[8] அவர்களிடமிருந்து 'குறும்பப் பழங்குடியினரது புகிரி' ஒன்று, நீலமலை மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்குக் கொடையாகப் பெறப்பட்டு, காட்சிப்படுத்தப் பெற்றுள்ளது.

1996–'97 காலக்கட்டத்தில் நீலகிரி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தின் காப்பாட்சியர் முனைவர். சி. மகேசுவரன் 'திங்கள் காட்சிப் பொருள்' எனும் புதுமைத் திட்டத்தின் கீழ் இவ்வருங்காட்சியகத்தின் 'பழங்குடியினர் காட்சிக் கூடத்தில் தொதவர், குறும்பர், இருளர் மற்றும் படுகர் சமுதாயத்தினரது புகிரி[9]களைப் பொது மக்கள் பார்வைக்கெனக் காட்சிப்படுத்தியதுடன், அவற்றைப் பற்றிய விரிவான 'விளக்கக் குறிப்புகளை'யும் அணியமாக்கி, ஆவணப்படுத்தியுள்ளார்.

2. சொற்பிறப்பியல் ஆராய்ச்சி வாயிலாக 'நீலமலைப் புகிரி' குறித்த ஊகக் கருத்துரு

திராவிடச் சொற்பிறப்பியல் அகர முதலியில் (திருத்திய பதிப்பு – 1984) தொதவா, கோத்தா, குறும்பா, இருளா மற்றும் படுகு ஆகியவற்றில் காணலாகும் புகிரி பற்றிய உறவுடை சொற்களாகப் பின்வருவன பதிவு செய்யப்பெற்றுள்ளன

தொதவா புஹுரி (puxury)

கோத்தா புகிர் (bugi.r)

பால் குறும்பா புகிரி (bugiri)

ஆல் குறும்பா புகுரி (buguri)

படுகு புகுரி (bugiri)

மேலும், இவ் உறவுடை சொற்கள் தமிழ், மலையாளம் ஆகியவற்றில் காணலாகும் உறவுடை சொற்களுடன் (காண்க: தமிழ் பூரி (puri), பூரிகை (purikai); மலையாளம்: பூரிகா (purika) "எக்காளம்" தொடர்புடையனவாக இருக்கலாமோ எனும் தமது

அய்யப்பாட்டையும் இவ்விருவரும் அந்த இடத்திலேயே எழுப்பியுள்ளனர். இன்னும் நுணுகி ஆராயின், தமிழில் காணலாகும். புகு(ர்)- "நுழை" எனும் வினைச் சொல்லின் அடிப்படையில் (காற்றுப் புகுந்து இசை எழுதலால்) புகுரி எனும் சொல் பிறப்புற்றிருக்கலாம் எனக் கருதுகோள் ஒன்று முகிழ்க்கக் காணலாம்[10].

உறவுடை திராவிட மொழிகளின் உறவுடைச் சொற்களில் 'ஒலிப்புடை வெடிப்பொலிகளும்' 'ஒலிப்பிலா வெடிப்பொலிகளும்' ஒருங்கே காணப்படின், 'ஒலிப்பிலா வெடிப்பொலிகளே' அடிப்படையானவை என ஒப்பியல் திராவிடத்தில் மீட்டுருவாக்கம் செய்யப்பெறுதல் வேண்டும் என நெறிமுறை ஒன்று உள்ளது. இந்த அடிப்படையில் நோக்கும்போது, தொதவ மொழியில் மட்டுமே புகுரி எனும் சொல்லில் 'ஈரிதழ் ஒலிப்பின் வெடிப்பொலி' காணப்படுதலால் புகிரி இசைக்கருவி தொதவப் பழங்குடியினரிடமே முதலில் முகிழ்த்து, பின்னர் பண்பாட்டுப் பரவல் வாயிலாக ஏனைய நீலமலை ஆதிக்குடிச் சமுதாயத்தினரிடையே அவரது பண்பாட்டு எல்லைகளைக் கடந்து, பண்பாட்டு நிலைபேறு அடைந்ததுள்ளது எனக் கருதலாம். ஏனைய ஆதிக்குடிச் சமுதாயத்தினரைக் காட்டிலும் தொதவப் பழங்குயினரே 50-க்கும் மேற்பட்ட மெட்டுக்களைப் புகிரியின் வாயிலாக இசைக்க வல்லோராக விளங்கியிருந்ததும் அவற்றின் வாயிலாகத், தமது எருமை மந்தைகளையும் தமது வாழிடத்தைச் சுற்றிலுமிருந்த காட்டு விலங்கினங்களையும் வசியம் செய்ய வல்லோராகத் திகழ்ந்திருந்ததும் இக்கருத்துக்கு வலிமை சேர்க்கக் காணலாம்.

அடிக்குறிப்புகள்

1 தொதவ மொழியில் இது 'ஹொசார்' எனக் குறிக்கப்பெறுகிறது.

2 இதைப் 'பண்பாட்டு உலகியல் நோக்கு' எனவும் சுட்டலாம்.

3 இது பாம்பாட்டியின் மகுடியை ஒத்த ஒரு துளை இசைக்கருவியாகும்.

4 'Buccal Air Stream' எனும் ஆங்கிலக் கலைச்சொல் இக்கட்டுரை ஆசிரியரால் இவ்வாறு மொழியாக்கம் செய்யப்பெறுகிறது.

5 பின்னர் இப்பதவி 'மாவட்ட ஆட்சித்தலைவர்' எனும் பதவியாக ஆங்கிலேயரால் மாற்றப்பெற்றது.

6 தொதவ சமுதாயப் பணியாளரான திருமிகு. யூ. கொட்ராடக் குட்டன் அவர்களால் இப்புகிரி கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

7 'Temporary Loan' எனும் ஆங்கிலக் கலைச் சொல் இவ்வாறு இக்கட்டுரை ஆசிரியரால் இங்கு மொழியாக்கம் செய்யப்பெற்றுள்ளது.

8 இப்புகிரி குறும்பச் சமுதாயப் பணியாளர் திருமிகு. எம். அர்ச்சுனன் – அவர்களால் கொடையாகப் பெறப்பட்ட ஒன்றாகும்.

9 கோத்தப் பழங்குடியினரிடையே புகிரியைக் குறிக்கும் சொல் காணப்படினும் இதுவரை 'கோத்தரது புகிரி' இக்கட்டுரை ஆசிரியருக்குக் கிடைக்கப் பெறவில்லை.

10 மேற்படிக் கருதுகோள் இக்கட்டுரை ஆசிரியருடையது.

நோக்கீட்டு ஏடுகள்

1. Breeks, J.W., An Account of the Primitive Tribes and Monuments of the Nilgiris, Madras Government Press, 1873.
2. Emeneau, M.B., Toda Songs, Oxford . Clarendon Press, 1972.
3. Emeneau, M.B., & T. Burrow, Dravidian Etymological Dictionary (Revised Edition) Oxford: Clarendon Press. 1984.
4. Venugopal D.,The Nilgiris, Ooty . Nilgiri Documentation Centre, 1993.

கோபி வைரவிழா மேல்நிலைப் பள்ளியில் கிடைத்த புதையல்

– அ. பெரியசாமி, காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், ஈரோடு.

1996, அக்டோபர்த் திங்களில் கோபி வைர விழா மேல்நிலைப்பள்ளியில், ஒரு பழைய கட்டத்தை இடித்த பொழுது, சுவரின் நடுவே 3/4 அடி உயரமுள்ள ஒரு கண்ணாடிக் குடுவையில் கி.பி. 19–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 10 ஆங்கிலேயர் காசுகளும், கி.பி. 18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரராயன் காலத்திய தங்க நாணயம் ஒன்றும், 1898–ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வெளியான 12 பக்கங்களைக் கொண்ட "தி இந்து" ஆங்கில நாளிதழும், அதே நாளில் வெளியிடப்பட்ட 4 பக்கங்களைக் கொண்ட 'தி மெட்ராஸ் மெயில்' என்ற நாளிதழும் புதைப்பொருட்களாகக் கிடைத்துள்ளன.

புதையல் பொருட்கள் 1996 நவம்பரில் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் பத்து நாணயங்கள் 1835–ஆம் ஆண்டு முதல் 1894–ஆம் ஆண்டு வரை, ஆங்கிலேயர் இந்தியாவில் ஆட்சி புரிந்தபோது வெளியிடப்பட்டவை. இவை தவிர கி.பி. 18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 5 மி.மீ. விட்டமுள்ள வீரராயன் பணம் எனும் தங்கக்காசும் கிடைத்துள்ளது. சுமார் 350 மி. கிராம் எடையுள்ள இத்தங்கக்காசு, ஒரு புறம் புள்ளிகளால் ஆன தேவதை போன்ற உருவத்தையும், மறுபுறம் பல புள்ளிகளையும் கொண்டுள்ளது. கிழக்கிந்திய கம்பெனியார் இந்தியாவில் வியாபாரம் செய்த பொழுது, அனந்தராயன் பணம், வீரராயன் பணம் என்று அழைக்கக்கூடிய அரை மச்சத்துடன் கூடிய தங்கக்காசுகள், கொங்கு நாட்டில் புழக்கத்தில் இருந்துள்ளன.

பழங்காலத்தில் ஒரு கட்டடம் கட்டும்பொழுது, அக்கட்டட சுவரின் நடுவே, மண் கலயத்திலோ அல்லது இரும்புக் கலயத்திலோ, காசுகள் அல்லது கடவுள் உருவம் பொறித்த உலோகத்தையோ வைத்துக்கட்டும் வழக்கம் இருந்துள்ளது. அந்த வழக்கத்தின் காரணமாக மேற்கண்ட பள்ளியின் கட்டடத்தைக் கட்டும் பொழுது, அப்பொழுது புழக்கத்தில் இருந்த காசுகளையும் வைத்துப் புதைத்திருக்கலாம்.

காசுகளை மட்டும் வைத்துப் புதைக்காமல், அக்காலக் கட்டத்தில் இருந்த ஆங்கில செய்தித் தாட்களையும், கட்டடம் கட்டப்படும் வரலாற்றுப் பின்னணியையும் ஒரு அறிக்கை போன்று தயார் செய்து புதைத்து வைக்கப்பட்டுள்ளது இன்புறத்தக்கதாகும்.

புதையலில் கிடைத்த செய்தித்தாள்கள்

மேற்கண்ட புதையலில் கிடைத்துள்ள 1898–ஆம் ஆண்டு, மார்ச் மாதம் புதன்கிழமை வெளியான 'தி இந்து' ஆங்கில நாளிதழில் அக்கால விளம்பரங்கள் பல இடம் பெற்றுள்ளன. அதே போல் 'தி மெட்ராஸ் மெயில்' என்னும் ஆங்கில நாளிதழில் பல்வேறு வகையான விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட புதையலில் ஆங்கில நாளிதழ்கள் மட்டுமே வைத்து புதைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாளிதழ்கள் அக்காலத்தில் வெளிவந்த போதிலும், அவைகள் புதைக்கப்படவில்லை. கோபிச் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த மக்கள், முன்னிலையில்தான் மேற்கண்ட கட்டடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆங்கிலேய அதிகாரிகளின் அச்சுறுத்தல் காரணமாகவோ அல்லது, பயத்தின் காரணமாகவோ மேற்கண்ட புதையலில் தமிழ்ப்பத்திரிக்கைகள் எதுவும் வைத்துப் புதைக்கப்படவில்லை எனக் கருத வாய்ப்புள்ளது.

புதையலில் கிடைத்த ஒரு அறிக்கை

1898–ஆம் ஆண்டு மார்ச் 3–ஆம் நாள் ஆங்கிலத்தில் கையால் எழுதப்பட்டுள்ள அறிக்கை ஒன்றும் மேற்படி பள்ளிக் கட்டடத்தை இடித்தபொழுது கிடைத்துள்ளது. அறிக்கையின் தமிழாக்கம் பின்வருமாறு:

1884–ஆம் ஆண்டு கோபிச்செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த சில மிராசுதாரர்கள். கோபியில் ஒரு ஆரம்பப்பள்ளியை நிறுவ எண்ணி. எஸ்.கே. கிருஷ்ணசாஸ்திரியார். வாத்தியார் சீனிவாச ஐயங்கார் ஆகியோர் உதவியுடன் ஒரு பள்ளியை ஆரம்பித்தனர். போதுமான கட்டட வசதியின்மையால். நாளடைவில் அப்பள்ளியின் செயல்பாடு திருப்தியளிக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் 1897–ஆம் ஆண்டு ஜூன் 8–ஆம் நாள் பிரிட்டீசு அரசி விக்டோரியா மகாராணியின் வைர விழாவைக் கொண்டாடுவதற்கான ஆலோசனைக் கூட்டம் கோபிச் செட்டிப்பாளையத்தில் நடந்தது. அந்த ஆலோசனைக் கூட்டத்தில். கோபிச்செட்டிப்பாளையத்தில் ஒரு பள்ளிக் கட்டடம் கட்டுவது என்றும். அக்கட்டடத்திற்கு "வைர விழா பள்ளிக் கட்டடம்" எனப் பெயர் சூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டு. கோபிச்செட்டிப்பாளையம் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அப்போதைய துணை மாவட்ட ஆட்சியரின் துணைவியார் திருமதி. கம்மிங் அப்பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார் என அவ்வறிக்கை கூறுகிறது.

கோபிச்செட்டிப்பாளைய நகர மக்கள் கல்விக்காக உழைத்த திரு. கம்மிங், திருமதி. கம்மிங் ஆகியோரையும் தங்கள் நெஞ்சங்களில் நினைத்து மகிழ்வார்கள் என்றும் கூறுகிறது.

விக்டோரியா மகாராணி நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்றும். ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவில் எந்த இடையூறும் இல்லாமல் நீடிக்க வேண்டும் என்றும் நாம் பிரார்த்தனை செய்வோம் என்றும் அந்த அறிக்கையின் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

3rd March 1878

Gobichettipalayam

As early as 1884 Some leading mirasdars of Gobichettipalayam, feeling the necessity of a well-managed school in the town, opened a middle school with the assistance of the Late Mrry S.K. Krishna Sastriar and the venerable Old Mrry Sreenivasa Iyangar. The School proved a thorough success and worked well till the want of a building gradually reduced it to an unsatisfactory condition. When arrangements were made to celebrate the "Diamond Jubilee of Her most Gracious - Majestry the Empress Victoria, in a preliminary meeting held on 8 June 1897, with our J.Q. Thord, our popular Deputy Collector, in the Chair, it was resolved to erect a school building and call it "The Diamond Jubilee School Building". As subscriptions came in, the present site was chosen for the school, and, at the earnest request of the Gobichettipalayam public, this foundation was laid this the 3rd day of March 1898 by"Mrs. Cumming. who had accompanied her beloved husband Mr. Cumming, as our acting District Collector, during his jamabandi tour to this town The people of this town will ever have at their heart the names of Mr. & Mrs. cumming whose names will soon become & continue for ever as familiar household reprcesious in connection with this school, and the cause of education in this town We all pray for a long and happy life to Her Most Gracious Majesty Empress - Victoria and her family, to Mr & Mrs Cumming and for a long and undisturbed continuance of the British Rule in India

முடிவுரை

இந்தியாவில் வெள்ளையர்களின் ஆட்சி. இடையூறு இல்லாமல் நீடிக்க வேண்டும் என்று பொது மக்கள் விரும்புவது போல் அறிக்கையினைத் தயார் செய்து, புதைத்து வைக்கப்பட்டுள்ளது. 1898–ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட பள்ளிக் கட்டடம் இன்று வைரவிழா மேல்நிலைப்பள்ளியாக, கோபிச் செட்டிப்பாளையத்தில் திகழ்கிறது. இவ்வறிக்கையினால், இப்பள்ளி உருவான வரலாறும் கல்விக்காக உழைத்த ஆங்கிலேயர்களைப் பற்றியும் அறிய முடிகிறது.

திருவிளக்குகள்

– ரு.தே. துளசிபிருந்தா,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கடலூர்.

இந்து சமய வழிபாட்டிலேயே விளக்கிற்கு முக்கிய பங்குண்டு. இறை வழிப்பாட்டில் தீபாராதனை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இறைவனை ஜோதியாகக் காண்பவர்கள் இந்துக்கள். எனவே, இறைவனை வழிபடும் முறையிலே தீபத்திறகு முக்கிய இடமளிக்கப்படுகிறது. அருணகிரிநாதர், "தீபமங்கள ஜோதி நமோநம" என முருகப்பெருமானைப் போற்றுகிறார். "ஜோதியே, சுடரே, சூழ ஒளிவிளக்கே" என்றும் "ஒளிவளர் விளக்கே" என்றும் மாணிக்கவாசகர் பெருமான் இறைவனைப் போற்றுகின்றார். எனவே இறைவனைத் தீபத்தைக் கொண்டே வழிபடும் வழக்கமுள்ளது. இவ்வழக்கில் தீபாராதனை என்பது வெறும் சடங்காக மட்டுமின்றி உலகில் உயிரின் தோற்றத்தையும், ஒடுக்கத்தையும் காட்டும் தத்துவ விளக்கமாகவும் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் தொன்று தொட்டு இல்லங்களிலே மாலை நேரத்தில் பெண்கள் குத்து விளக்கேற்றி வழிபடுவதும் வழக்கமாக உள்ளது. இவ்வழிபாடுகளில் அம்மன் விளக்குகள் ஏற்றி வழிபடும் வழக்கம் சிறப்பாக இருந்துள்ளது.

பழங்காலத்தில் மன்னர்கள் தானம் செய்யும் வழக்கத்தை கொண்டு இருந்தார்கள். குறிப்பாக கோயில்களுக்கு மிகுதியாகத் தானம் செய்துள்ளனர். விளக்கு வைக்க ஆடுகள் விடுவது, பசுக்கள் விடுவது, பசுக்களுடன் ரிஷபம் சேர்த்து விடுவது போன்ற செய்திகள் திருவோத்தூர் கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது. மேலும் விளக்கிற்காக வேண்டி, காசு (பணம்) மூலதானமாக வைப்பதை அல்லது விளக்கையே கொண்டு வந்து வைப்பதையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. முற்காலச் சோழர்கள், விளக்கு எரிக்க நெய்க்காக ஆடுகளையும், பசுக்களையும் தானம் வழங்கியுள்ளனர் என்பதும் திருவோத்தூர் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.

கோயில் விளக்குகள் பலவகைப்பட்ட தரத்தினை உடையதாய் இருந்து இருக்கிறது. சந்தி விளக்கு, திருவிளக்கு, சரவிளக்கு, குத்துவிளக்கு, நொந்தாவிளக்கு என்பனபோன்ற தீப விளக்குகள் ஆலயத்தை ஒளிமயமாக்கப்பயன்படுத்தப்பட்டன. இவற்றுள் நொந்தா விளக்கு மட்டுமே பிரசித்தி பெற்றது. இப்போது பெரும்பாலும் அவ்விளக்குகள் இல்லை. இந்த விளக்கு கோயில் முழுவதையும் ஒளிமயமாக்கி வரும் சக்தி படைத்ததாகும். இவ்விளக்கு நெய் மட்டுமே ஊற்றி எரிக்கப்பட்டது.

திருமாணிக்குழி கோவிலிலுள்ள ஒரு கல்வெட்டின் மூலம், நொந்தா விளக்குக்கென

நெய் ஊற்றி திபம் ஏற்ற கச்சிராயன் 32 பசுக்களைத் தானமாக விட்டுள்ளான் என்ற செய்தி அறியமுடிகிறது.

திருக்கன்னிஸ்வரம் கல்வெட்டுகளின் மூலம் பல்வேறு செய்திகள் அறிந்து கொள்ள முடிகிறது. குலோத்துங்கச் சோழனின் ஆட்சி ஆண்டில் 9 நொந்தா விளக்குகள் எரிக்கப்பட்டதையும். இதே குலோத்துங்கச் சோழனின் 38வது ஆட்சி ஆண்டில் தில்லைகூத்தன். திருவேகம்பமுடையான், கல்கண்டன், சாத்தன் எனும் அரசப்பிரதிநிதிகள் 9 நொந்தா விளக்கெரிய தானங்கள் செய்துள்ளனர். இதே மன்னரின் 40வது ஆட்சி ஆண்டில் இக்கோயிலுக்கு தனவாகளபாளன், செல்லையன், தொன்மைப்பாக்குடையான். உமையவள் நங்கைக்கென நொந்தா விளக்கெரிக்க வேண்டி ஆடுகள் விட்டுள்ளதை கல்வெட்டுகளின் மூலம் தெரியவருகிறது.

திருவதிகையிலுள்ள திருவீராட்டேனேஸ்வரர் கோயிலில் உள்ள சிலக் கல்வெட்டுகள் தானம் பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன. இக்கோயிலில் இரண்டாம் கோபுர வாயிலின் வடபக்கத்தில் உள்ள கல்வெட்டு மன்னர் செய்த தானத்தைத் தெரிவிக்கிறது. கோப்பெருஞ்சிங்கன் நொந்தா விளக்கெரிக்க 32 பசுக்களைத் தானம் செய்துள்ளார் என்ற செய்தி இக்கோயில் கல்வெட்டின் மூலம் தெரிகிறது. இக்கோயிலுள்ள மற்றொரு கல்வெட்டு கோப்பெருஞ்சிங்கன் ஆட்சியேற்ற மூன்றாவது ஆண்டில் (1246) செய்யப்பட்ட தானத்தைக் குறிக்கிறது. திருமுனைப்பாடி நாட்டின் பேரரசரான இம்மன்னன் நொந்தா விளக்கு எரிப்பதற்கென 32 பசுக்களையும் எட்டுகாளைகளையும். அவ்வாண்டு ஆனி மாதம் விட்டுள்ள இம்மாடுகளை திருவதிகையில் வழங்க. 'தொண்டைமகன்' என்பவனிடம் ஒப்படைத்து. இனப்பெருக்கம் செய்து. இவற்றால் வரும் பால். தயிர். வெண்ணெய். நெய் இவைகளைக் கோயில் மடப்பள்ளியில் ஒப்படைத்து, "அதிகை நாயகன் நாழி" எனும் அளவையால் உளக்கு நெய்யூற்றி, தினம் தீபமேற்ற இத்தானம் வழங்கி இருக்கிறான் என்பதை அறியமுடிகிறது. இக்கோயிலின் உட்பிரகாரத் தெற்குச் சுவரில் திருப்பதிகம் பதித்துள்ள சலவைக்கல்லின் பக்கத்திலுள்ள கல்வெட்டை கோப்பெருஞ்சிங்கனின் தந்தையான மணவாளப்பெருமான் இந்த கோயிலில் நொந்தா விளக்கு எரிப்பதற்கு ஐம்பது பசுக்களைத் தானம் செய்திருக்கிறான் என்றச் செய்தி தெரிய வருகிறது.

பழங்காலத்தில் மன்னர்கள் விளக்குத் தானம் செய்துள்ளதைப் பற்றி கல்வெட்டுச் செய்திகள் நமக்குச் சிறப்பாகத் தெரிவிக்கின்றன. இதிலிருந்து விளக்கின் பெருமையை நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. பழங்காலத்தில் மட்டுமின்றி, தற்போதும் தெய்வ பக்தி மிகுந்த பக்தர்கள் வேண்டுதலின் காரணமாக விளக்குகளைக் கோயில்களுக்குத் தானமாக வழங்குகிறார்கள். பெண்கள், சிலர் தோஷ நிவர்த்திக்காக கோயில்களில் எலுமிச்சம்பழத் தோலில் நெய் ஊற்றி, இறைவனுக்கு விளக்கேற்றி வைக்கிறார்கள்.

சிலர் அம்மை போன்ற நோயின் தாக்குதலால் அரிசி மாவைக் கொண்டு விளக்கு வடிவத்தில் அமைத்து, நெய் ஊற்றி, அம்மனுக்கு விளக்கேற்றி வரும் வழக்கம் இன்றும் கடைபிடிக்கப்படுகிறது. இதைப்போல் விளக்கின் சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

கடலூர் அருங்காட்சியகத்தில் காமாட்சியம்மன் விளக்குகள் மூன்று புதைபொருளாக பண்ருட்டி வட்டம், சேமக்கோட்டை என்ற கிராமத்திலிருந்து கிடைத்துள்ளது. பண்ருட்டிக்கு மேற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் சேமக்கோட்டை உள்ளது. இவ்வூரில் பழமை வாய்ந்த சிறப்புப் பெற்ற அருள்மிகு திருமூலநாதர் (சிவன்) கோயில் உள்ளது. இவ்வூர் ஒருகாலத்தில் சோழர்கள் ஆட்சி புரிந்த சிறப்பைப் பெற்றது.

சேமக் கோட்டையிலிருந்து புதைபொருளாக கிடைத்துள்ள மூன்று காமாட்சியம்மன் விளக்குகளைப் பற்றிக் காண்போம்.

I. சேர்க்கை எண் : 88/96

மூன்று விளக்குகளுள் அளவில் பெரியது. விளக்கின் உச்சியில் தாமரைப்பூ காணப்படுகிறது. விளக்கின் மேற் பகுதியில் கஜலட்சுமி அம்மனின் திருஉருவம் காணப்படுகிறது. அம்மனின் இருபுறங்களிலும் அதாவது விளக்கின் வலது மற்றும் இடது பக்கங்களில் பாவை விளக்கு (சிறிய பெண் உருவம் கையில் அகல் ஒன்றை ஏந்திக் கொண்டு நிற்கும் நிலையில் உள்ளது) காணப்படுகிறது. விளக்கின் முன்பகுதியில் ஒரு பெண் உருவம் (பாவை) கைகூப்பி வணங்கும் நிலையில் காணப்படுகிறது. விளக்கின் முன்பகுதியில் வலது மற்றும் இடது புறங்களில் இரண்டு யானைகள் தங்கள் துதிக்கைகளை மேலே தூக்கியவாறு காணப்படுகின்றன. இவ்விளக்கில் அம்மனின் தலைக்கு மேலே ஒரு நாகம் காணப்படுகிறது. அதற்கும் மேற் பகுதியில் சிங்கத்தின் முகம் காணப்படுகிறது. இவ்விளக்கின் பின்பக்கத்தில் அம்மன் திருஉருவம் செதுக்கப்பட்டுள்ளது. இந்த அம்மனின் பாதத்தின் கீழே இரண்டு பெண்களின் உருவங்கள் (பாவை) நிற்கும் நிலையில் காணப்படுகின்றன.

2. சேர்கை எண் : 89/96

முதல் விளக்கைவிட இது அளவில் சற்றுச் சிறியது. முன்னர் குறிப்பிட்ட விளக்கைப் போல இவ்விளக்கின் உச்சியில் தாமரைப்பூ காணப்படவில்லை. அதற்குப் பதிலாகக் கூம்பு வடிவம் காணப்படுகின்றது. விளக்கின் இரு புறங்களிலும் இரு பாவைகள் காணப்படுகின்றன. வலது பக்கத்திலுள்ள பாவை, விளக்கை ஏந்திக் கொண்டு நிற்கும் நிலையில் உள்ளது. இடது பக்கப்பாவையின் கைப்பாகம் உடைந்து விட்டது. இப்பாவை விளக்குகளின் கீழ்ப்பகுதியில் அதாவது விளக்கின் வலது மற்றும் இடது புறங்களில் ஒரு பெண் உருவம் வணங்கி நிற்கும் நிலையில் காணப்படுகிறது. அதேபோன்ற உருவம் விளக்கின் முன் பகுதியிலும் காணப்படுகிறது. விளக்கின் பின் பகுதியிலும் ஒரு பாவை

கைகூப்பி நிற்கும் நிலையில் காணப்படுகிறது. இவ்விளக்கின் முன் பகுதியில் கஜலட்சுமி திருஉருவமும். உருவத்தின் வலது மற்றும் இடது புறங்களில் இரு யானைகளும் தும்பிக்கையை அம்மனின் பக்கத்தில் தூக்கியவாறு காணப்படுகின்றன. இவ்விளக்கின் பின் பகுதியில், முன்னர் பார்த்த விளக்குப்போல் அம்மன் உருவம் காணப்படவில்லை. முன்னர் பார்த்த விளக்கைப்போல நாகமும் அதன் மேல் சிங்கத்தின் முகமும் இவ்விளக்கில் இல்லை. அதற்குப் பதிலாக பூவேலைப்பாடுகள் மிக அழகாக காணப்படுகின்றன. அம்மன் உருவத்தின் கீழே இரண்டு அன்னப்பறவைகளின் உருவங்களும் காணப்படுகின்றன.

3. சேர்க்கை எண் : 90/96

இவ்விளக்கு முன்னர் பார்த்த இரு விளக்குகளைவிட அளவில் சிறியது. இவ்விளக்கின் உச்சியில் பூவின் மொட்டைப்போல அழகிய வண்ண வேலைப்பாடு செய்யப்பட்டுள்ளது., விளக்கின் முன் பகுதியில் கஜலக்ஷ்மியின் திருஉருவம் காணப்படுகிறது. அம்மனின் இரு பக்கங்களிலும் இரு யானைகள் துதிக்கைகளை மேலே தூக்கியவாறு காணப்படுகின்றன. விளக்கின் வலது மற்றும் இடது பக்கங்களில் இரு பாவைகள் கையில் அகல் விளக்கை ஏந்திக் கொண்டு நிற்கும் நிலையில் காணப்படுகின்றன. இவ்விளக்கின் முன் பகுதியில் முன்னர் பார்த்த விளக்குகளைப் போலவே ஒரு பெண் உருவம் (பாவை) சற்றே சாய்ந்த நிலையில் காணப்படுகின்றது. விளக்கின் பின் பக்கத்தில் அம்மனின் திரு உருவம் (முதலில் பார்த்த விளக்கைப் போல) காணப்படுகிறது. அம்மனின் திருஉருவத்திற்குக் கீழ்ப்பக்கத்தில் இரண்டு பாவைகள் நிற்கும் நிலையில் காணப்படுகின்றன. மற்ற இரு விளக்குகளைப் போல வலது மற்றும் இடது புறங்களில் பாவைகள் காணப்படவில்லை. மேலும் இவ்விளக்கில் அம்மனின் தலைக்கு மேல் நாகம் காணப்படவில்லை. ஆனால் சிங்க முகம் காணப்படுகிறது. முன்னர் பார்த்த விளக்கைப் போல அன்னப் பறவைகள் இதில் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக சில வண்ண வேலைப்பாடுகள் கலைநுட்பத்துடன் காணப்படுகின்றன.

இம்மூன்று விளக்குகளும் அழகிய பூ வேலைப்பாட்டுடனும் பல வண்ண அமைப்புகளுடனும் கலை நுட்பத்திறனுடனும் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளன. இவ்விளக்குகள் கோயில்களில் இறைவழிபாட்டிற்கென பயன்பட்டிருக்கும். இவ்விளக்குகள் கி.பி. 12–13–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவ்விளக்குகள் தற்போது கடலூர் அருங்காட்சியகத்தின் இருப்பில் உள்ளன.

இன்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளிலும், கோயில்களிலும், இல்லங்களிலும் காமாட்சியம்மன் விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டு, இறைவழிபாட்டில் பெரும்பங்கு வகிக்கின்றன.

கடலூர் அருங்காட்சியகத்தில் சிறுவர் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றோர்க்கு அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப,, பரிசளிக்கிறார்.



மதுரை அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள டைனாசரஸ் கண்ணாடி இழை மாதிரி.

புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் - பயிற்சி நிறைவு விழாவில் திரு. ஜி. என். வரதன், இந்திய புவியியல் ஆய்வு நிறுவன முதன்மை இயக்குநர், புவியியல் கண்காட்சியைத் தொடங்கி வைக்கிறார்,

சென்னைப் பல்கலைக் கழக மூவர் குழுவினர் பேராசிரியர்கள் முனைவர் எஸ். குருமூர்த்தி, முனைவர் பி. ஜெகதீசன், முனைவர் தெ. ஞானசுந்தரம் ஆகியோர் ஆணையருடன் வேதியியப் பாதுகாப்பு ஆய்வகத்தைப் பார்வையிடுகின்றனர்.

கிருட்டிணகிரி அருங்காட்சியகத்தில் நாணயக் கண்காட்சியை
கோட்டாட்சியர் தொடங்கி வைத்து பார்வையிடுகிறார்.



மயிலாடுதுறை, ஏ. வி. சி. கல்லூரி மாணவர்களுக்கு விலங்கினப்
பொருட்களைப் பதப்படுத்தும் பயிற்சி



பெட்டுலா உட்டிலிஸ் எனப்படும் போஜ்பத்தர் மரக்கிளை மற்றும் பட்டையின் தோற்றம்.



மூதேவி (கற்சிற்பம்) திருமகள் (தலையற்றது) கருங்கல்
கி. பி. 9 ஆம் நூற்றாண்டு கி.பி. 10 ஆம் நூற்றாண்டு
கழிப்பாக்கம், வேலூர் வட்டம், வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்.

அத்திரம்பாக்கம் ஆற்றுப் படுகையில் சென்னைக் கிருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு பழைய கற்காலக் கருவிகளைச் சேகரித்து பயிற்றுவிக்கிறார் துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம்



ஆவணங்கள் பாதுகாப்பு நிறைவு விழாவில் பயிற்சியாளர்களுடன்
அருங்காட்சியக ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ. ஆ. ப.,
மற்றும் ஆவணக்காப்பக ஆணையர் திருமதி சி. கே. கரியாலி, இ.ஆ.ப.,

கடலூர் அருங்காட்சியகத்தில் பள்ளி மாணவர்களுக்கு அரும்பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சி



கோயில் செயல் அலுவலர்களுக்கு கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்புப் பயிற்சி

கடலூர் பாடலீஸ்வரர் கோயிலில் மாணவர்கள் வேதியியப் பாதுகாப்பு பணி மேற்கொள்ளும் காட்சி